விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 233 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 23 வியாழக்கிழமை (08.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




### மருத்துவர் அர்ச்சுனா விடுதலை
## ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி அமோக வரவேற்பு



(மன்னார்)

மன்னார் நீதிமன்றத்தினால் நேற்று புதன்கிழமை நிபந்தனையின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்ட மருத்துவர் அர்ச்சுனாவிற்கு மன்னார் மாவட்ட மக்கள் அமோக வர

15

### பதவிகளை எதிர்பார்த்து
## உடன்படிக்கை செய்யவில்லை
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

எந்தவிதப் பதவிகளையும் எதிர்பார்த்து ஶ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஐக்கிய மக்கள் சக்தியுடன் உடன்படிக்கையைக் கைச்சாத்திடவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று கைச்சாத்திடப்பட்ட பின்னர் ஊடகங்

16

### 34 அபிவிருத்தித் திட்டங்கள்
# எவ்வித பயனுமின்றி கைவிடப்பட்டுள்ளது
## 6.37 பில்லியன் பொது நிதி வீணடிப்பு
## பாராளுமன்றக் குழு அறிக்கை

*(கொழும்பு)* 6.37 பில்லியன் ரூபாய் பொது நிதியை செலவிட்டு கடந்த 5 முதல் 6 வருடங்களாக ஆரம்பிக்கப்பட்ட 34 அபிவிருத்தித் திட்டங்கள் எவ்வித பயனுமின்றி கைவிடப்பட்டுள்ளதாகப் பாராளுமன்றக் குழு நேற்று தெரிவித்துள்ளது.

*(16ஆம் பக்கம் பார்க்க)*

### 22 வேட்பாளர்கள்
## கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்

(கொழும்பு)

2024ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்காக மொத்தம் 22 வேட்பாளர்கள் இதுவரை கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாகத் தேர்தல்

15

## வாக்களிப்பு நிலையங்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

15

## கரவெட்டியில் அனுமதியின்றி கட்டப்பட்ட மதில்கள் இடித்தழிப்பு



(கரவெட்டி)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை (கரவெட்டிப் பிரதேச சபை) எல்லைக்கு உட்பட்ட நெல்லியடி நகரம், கரணவாய் வடக்கு ஆகிய பிரதேசங்களில் இருவேறு காணி உரிமையாளர்களால் பிரதேச சபையின்

16

## நல்லூர்க் கந்தனுக்கு நாளை கொடியேற்றம்
### ஆலயச் சுற்று வீதிகளில் இன்று முதல் போக்குவரத்துத் தடை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவப் பெருவிழா நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் இன்று காலையில் இருந்து நல்லூர் ஆலயச் சுற்று வீதிகளில் போக்கு

15

## இணுவிலில் குப்பைக் கிடங்கில் தீப்பரவல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்கு சொந்தமான இணுவில் குப்பைக் கிடங்

15

### முல்லைத்தீவு கேப்பாப்பிலவில்
## மின்சாரம் தாக்கியதில் சிப்பாய் உயிரிழப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - கேப்பாப்பிலவுப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமொன்றில் கடமையாற்றும் இராணுவச் சிப்பாயொருவர் நேற்று மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாக இராணுவப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கேப்பாப்பிலவுப் பகுதியிலுள்ள ஆறாவது காலாட் படையில்

15

### தமிழ்ப் பொது வேட்பாளர்
## உத்தியோகபூர்வமாக இன்றே அறிவிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பொது வேட்பாளரின் பெயர் இன்று வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு

15

## கேரளா வயநாடு கிராமத்தை போன்று

# பொன்னாவெளி, கௌதாரிமுனை கிராமங்கள் அழிவடையும் - சிறீதரன்

கேரள மாநிலத்திலுள்ள வயநாடு கிராமம் அழிவடைந்ததை போன்று இலங்கையில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பொன்னாவெளி, கௌதாரிமுனை கிராமமும் அழிவடைந்து, இலங்கையின் வரைபடத்தில் இருந்து இல்லாமல் போகும் அபாயம் காணப்படுகிறது. பேரழிவை தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் சபையில் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை (07) இடம்பெற்ற அரையாண்டின் அரசிறை நிலைப்பாட்டு அறிக்கை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்று கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

இந்தியாவின் கேரள மாநிலத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் வாழ்ந்த வயநாடு தற்போது காணாமல் போயுள்ளது. 500க்கும் மேற்பட்ட குடும்பங்களை சேர்ந்தவர்களை காணவில்லை. ஒரே இரவில் நடந்த அனர்த்தத்தில் ஒரு ஊரே காணாமல் போயுள்ளது. ஊரை காணவில்லை,இங்கிருந்த மக்களை காணவில்லை என கதறி அழுதார்கள் , இணையத்தளங்களில் பார்த்தேன். மனிதனின் கண்டுபிடிப்புகள் இங்கே தோற்றுப்போயுள்ளன.

இயற்கை பேரழிவுக்கு முன்னால் மனிதன் மண்டியிட்டு கிடக்கின்றான் என்பதையே இந்த சம்பவம் எமக்கு பாடமாக காட்டியுள்ளது. சாதி மதம் இன்றி,ஊர் கடந்து எந்த வேறுபாடுகளும் இன்றி உதவுகின்ற மக்களை பார்க்கின்றோம். முண்டக்கை, சூரல் மலை உள்ளிட்ட சில கிராமங்களையும் காணவில்லை. தாயை காணவில்லை, தந்தையை காணவில்லை என்று பிள்ளைகள் கதறுவதை பார்க்கும் போது மனம் வெதும்பியது.

இது இயற்கை பேரிடராகும். இந்த நிலைமைகளை பார்க்கும் போது 2008 மற்றும் 2009 காலப்பகுதியில் எமது மக்கள் முள்ளிவாய்க்காலுக்கு சென்ற போது நேர்ந்தவையே எனக்கு நினைவுக்கு வந்தது. வயநாடு நிலைமை இயற்கையானது. ஆனால் இங்கே நடந்தது செயற்கையானது.

அதேவேளை கௌதாரிமுனையில் மக்கள் 6 வருடங்களுக்கு முன்னர் போராடினர். மண் மேடுகளை அள்ள வேண்டாம் என்றும் கோரினர். அந்த பிரதேசத்தை வரைபடத்தில் இருந்தே இல்லாமல் போகுமளவுக்கு நீதித்துறையே அனுமதி வழங்கியுள்ளதென்றால் நீதித் தராசு எங்குள்ளது என்பதை புரிந்து கொள்ளலாம். இயற்கையை காப்பாற்ற மக்கள் போராடினர்.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் பொன்னாவெளி கிராமமும் மற்றும் கௌதாரி முனை கிராமமும் இலங்கையின் வரைபடத்தில் இருந்தே காணாமல் போகப் போகின்றது. இந்த இரண்டு கிராமங்களையும் காப்பாற்ற வேண்டும். அங்குள்ள இயற்கைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இங்கேயும் ஒரு வயநாடு உருவாகி விடக்கூடாது என்று உயரிய சபையில் வலியுறுத்துகின்றேன் என்றார். (ம-7)

# மத்திய வங்கியின் கையிருப்பில் வீழ்ச்சி

இலங்கை மத்திய வங்கிக்கு சொந்தமான உத்தியோகபூர்வ வெளிநாட்டு கையிருப்பு சொத்துக்களின் அளவில் 2024 ஜூலை மாதம் சிறிதளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள சமீபத்திய தரவு அறிக்கைகளின்படி.

2024 ஜூன் மாதம் 5,654 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவான உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்களின் மதிப்பு 2024 ஜூலை மாதம் 0.1% குறைந்து 5,649 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உள்ளது.

உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்களின் முக்கிய அங்கமான அந்நியச் செலாவணி கையிருப்பு கடந்த ஜூலை மாத இறுதியில் 5,574 மில்லியன் டொலராக இருந்தது.

இது ஜூன் மாதம் பதிவான 5,605 மில்லியன் டொலர்களை விட 0.6% குறைவாகும்.

இதேவேளை, கடந்த ஜூலை மாதத்தில் இலங்கை மத்திய வங்கியின் தங்க கையிருப்பு 35 மில்லியன் டொலரில் இருந்து 37 மில்லியன் டொலர்களாக 5.2% அதிகரித்துள்ளது.

இந்த உத்தியோகபூர்வ கையிருப்பு சொத்துக்களில் சுமார் 1.4 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு சமமான, சீன மக்கள் வங்கியின் அந்நியச் செலாவணி வசதியிலிருந்து பெறப்பட்டவை உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், இதன் பயன்பாடு நிபந்தனைகளுக்கு உட்பட்டது என இலங்கை மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

# நீதி, சிறைச்சாலை அமைச்சு ஜனாதிபதி ரணிலின் கீழ்

## வர்த்தமானி வெளியீடு

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் பதவியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கீழ் கொண்டு வந்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக விஜயதாஸ ராஜபக்ஷ அந்த அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்தமையே இதற்குக் காரணமாகும்.(ம-7)

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை பாலசுப்பிரமணியம் (பாலன்)



தோற்றம் - 16.04.1941 மறைவு - 06.08.2024

கதிரிப்பாய் அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் அல்லையம்பதி, துன்னாலை, கரவெட்டியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திரு. செல்லத்துரை பாலசுப்பிரமணியம் (பாலன்) அவர்கள் 06.08.2024 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - இராசம்மா தம்பதியினரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான சித்தி விநாயகமூர்த்தி ஐயர் - நல்லம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகனும் ஞானாமிர்தம் அவர்களின் அன்புக் கணவரும் Dr. விஜிதபாலா(தேசிய வைத்தியசாலை - கண்டி), சாந்தி(Newzealand), கார்த்திகா, சிந்துஜா(Netherland) ஆகியோரின் பாசமிகு தந்தையும் Dr.ஜனனி(ஆரம்ப மருத்துவ நிலையம் - ஹற்றன்), கிருஸ்ணகுமார் (Newzealand), டொனால்ட்(London), ரவிக்குமார்(Netherland) ஆகியோரின் மாமனாரும் ரிஷிவர்மா, வினுஜன் ஆகியோரின் அப்பப்பாவும் ஹரிகாலன், சாலினி, வர்ணிகா, ஹேசிகன், கியாரா ஆகியோரின் அம்மப்பாவும் வசந்தா, மகாலிங்கம் ஆகியோரின் சகோதரனும் Dr.குழந்தைவேலு, சந்தானலக்சுமி ஆகியோரின் மைத்துனரும் சுந்தரமூர்த்தி, கணேசமூர்த்தி(அமரர்), Dr.கிருஸ்ணமூர்த்தி, ஞானமூர்த்தி, ஞானமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.08.2024) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அல்லையம்பதி, துன்னாலை கரவெட்டியில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அச்சுவேலி கதிரிப்பாய் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
(மகன்) விஜிதபாலன்.
077 725 1037

(C-948)

# 31ஆம் நாள் சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



அன்னை மடியில் 06.01.1955

ஆண்டவன் அடியில் 11.07.2024

## உயர்திரு. சிதம்பரப்பிள்ளை கங்காதரன்

(இளைப்பாறிய உத்தியோகத்தர், இ.மி.ச – S.B.O)

09.08.2024 நாளை வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருக்கும் சபிண்டீகரணக் கிரியையிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு பேரன்போடு அழைக்கின்றோம்.

கிழவிதோட்ட விக்ன விநாயகரின் பாதார விந்தங்களில் இளைப்பாறும் எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு சகல வழிகளிலும் பேருதவி புரிந்தோர்க்கும் தங்கள் வார்த்தைகளால் எம்மை ஆறுதற்படுத்தியோர்க்கும் நாளை நடைபெறவிருக்கும் நிகழ்வுகளில் கலந்துகொள்ளவிருக்கும் அன்புள்ளங்களுக்கும் மனம் நெகிழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கங்காதரன் மீதும் எங்கள் மீதுமுள்ள தங்களின் பேரன்பினால் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந் நிகழ்வில் கலந்து கொள்வீர்களென எதிர்பார்க்கின்றோம்.**

பற்பைவளவு,
வதிரி, கரவெட்டி.

- குடும்பத்தினர்

(C-947)

# மக்களின் பணத்தை வீணடிக்க மாட்டோம்

## தேசிய மக்கள் சக்தி

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு எந்த வகையிலும் உதவாது என தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தேசிய அமைப்பாளர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

பேரணி ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.அதன்படி தாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியம் ரத்து செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு 5 வருடங்கள் பதவியில் இருந்து ஓய்வூதியம் வழங்கும் நாடு இலங்கை மட்டுமே எனவும், அவ்வாறு மக்களின் பணத்தை வீணடிப்பது முட்டாள்தனமான செயல் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# குடும்பத்தில் பிளவு ? வெளியேறும் பசில் !

**(கொழும்பு)**

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ இன்னும் சில தினங்களில் அமெரிக்காவுக்குச் செல்ல தயாராக இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**



நாமல் ராஜபக்சவை வேட்பாளராக நிறுத்தியதன் மூலம் ராஜபக்ச குடும்பத்தில் பிளவு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ச போட்டியிட தீர்மானத்துள்ளார்.

எதுவித முன் அறிவித்தலும் இன்றி பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவதை தம்மிக்க பெரேரா ஏற்க மறுத்ததுள்ளார்.

இந்நிலையில், பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும், பெரமுன கட்சியின் கோரிக்கையை நிராகரித்துள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி-6)

# தேர்தல் பிரசாரத்தில் பொலித்தீனுக்கு தடை

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்தின் போது பொலித்தீன் பயன்பாட்டுக்கு தடை விதிக்கப்பட உள்ளது.

பொலித்தீன் பயன்பாடு அற்ற பிரசாரம் தொடர்பில் வேட்பாளர்களை தெளிவுபடுத்த வேண்டுமென சுற்றாடல் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் வேட்பாளர்களை தெளிவுபடுத்த வேண்டுமென தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரும், ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்களும் இந்த யோசனைக்கு இணங்கியுள்ளனர்.

பிரசாரங்களின் போது பாரி யளவில் பொலித்தீன் பயன் படுத்துவதனால் சுற்றுச் சூழலுக்கு பாரியளவு தீங்கு ஏற்படுவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதனை தவிர்ப்பது குறித்து தெளிவுபடுத்தும் கூட்டமொன்று நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் தேர்தல் ஆணைக்குழு அதிகாரிகள் இந்த சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். (நி-6)

# விசேட நடவடிக்கையின் கீழ் 750 சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

விசேட நடவடிக்கையின் கீழ் நடத்தப்பட்ட சுற்றிவளைப்புகளில் 750 சந்தேக நபர்களும் 26 பெண் சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்

அதன்படி 22 சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக தடுத்து வைக்கப்படவுள்ளதாகவும், 3 சந்தேக நபர்களின் சொத்துக்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளதாகவும் மூவர் புனர்வாழ்விற்காக பரிந்துரைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் போது மேல் மாகாணத்தில் 503 சுற்றிவளைப்புகளும், தென் மாகாணத்தில் 62 சுற்றிவளைப்புகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-6)

# தேர்தல் முறைப்பாடுகள் தொடர்ந்தும் அதிகரிப்பு

## ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான தேர்தல் முறைப்பாடுகள் அதிகரித்துள் ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி இதுவரை 121 தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜுலை 31ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் மாலை 4.30 மணி வரை கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமையவே தேர்தல் ஆணைக் குழு இதனை தெரிவித்துள்ளது. (நி-6)

# ஐ.ம.ச - தயாசிறி ஒப்பந்தம் கைச்சாத்து



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியுடன் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தலைமையிலான புதிய கூட்டணி ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

நேற்றுக் காலை பத்தர முல்லையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நிகழ்வு நடை பெற்றது.

அதன்படி தயாசிறி ஜயசேகர தலைமையிலான கூட்டணி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

மேலும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாசவுக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தலைமையிலான புதிய கூட்டணி அறிவித்துள்ளது. (நி-6)

# ஆதரவின்றேல் பதவியில்லை அமைச்சர் காஞ்சன எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்காமல் அமைச்சுப் பதவிகளில் இருப்பவர்கள் அந்த அமைச்சுப் பதவிகளை விட்டு விலக்க நேரிடும் என எதிர்பார்ப்பதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ரணில் விக்கிரமசிங்க

விற்கு ஆதரவு வழங்குவது புதிய விடயம் அல்ல எனவும், இரண்டு வருடங்களுக்கு முன்னர் கட்சி எடுத்த தீர்மானம் அது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கட்சி பல துண்டுகளாக பிரிந்து கிடப்பதாகவும், இப்படியே போனால் மிக சொற்பமே மிஞ்சும் என்றும், இனிவரும் காலங்களில் பொதுச்செயலாளர் மட்டுமே கட்சியில் இருப்பார் என்றும் தெரிவித்தார். (நி-6)

# விளையாட்டுச் செய்திகள்

## பங்களாதேஷ் முன்னாள் கப்டன் வீட்டுக்கு தீவைப்பு



பங்காளதேஷத்தில் வன்முறை வெடித்ததை அடுத்து, வங்காளதேச பிரதமர் ஷேக் ஹசீனா தனது பதவியிலிருந்து விலகி, தற்போது இந்தியாவில் தஞ்சமடைந்திருக்கிறார்.

இந்நிலையில் பங்காளதேஷ் முன்னாள் கிரிக்கெட் வீரரும் பாராளுமன்ற உறுப்பினருமான மோர்டாசாவின் வீட்டுக்கு போராட்டக்காரர்கள் தீ வைத்தனர்.

முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் கட்சியான பங்களாதேஷ் அவமி லீக் சார்பில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராக தேர்வான இவர், கட்சியின் கொறடாவாக செயல்பட்டு வந்துள்ளார். இந்த சூழலில் மோர்டாசாவின் வீட்டுக்குள் சென்ற போராட்டக்காரர்கள் அங்குள்ள பொருட்களை தீ வைத்து கொளுத்தினர். இந்த தீ வைப்புச் சம்பவம் அந்தப் பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. (நி-6)

## தென்னாபிரிக்கா தொடரில் விளையாடவுள்ள தினேஷ் கார்த்திக்



இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் தினேஷ் கார்த்திக் தென்னாபிரிக்க கிரிக்கெட் தொடரில் விளையாட இருக்கிறார்.

இதன் மூலம் தென்னா பிரிக்க 20 தொடரில் விளையாடும் முதல் இந்திய வீரர் என்ற பெருமையை தினேஷ் கார்த்திக் பெறுகிறார். இவர் இந்தத் தொடரின் பார்ல் ராயல்ஸ் அணிக்காக விளையாட உள்ளார்.

அடுத்த ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதி தொடங்க இருக்கும் புதிய குறித்த சீசனில் இந்திய அணியின் முன்னாள் வீரர் தினேஷ் கார்த்திக் பார்ல் ராயல்ஸ் அணிக்காக விளையாட இருக்கிறார்.

கடந்த ஜூன் மாதம் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வை அறிவித்த தினேஷ் கார்த்திக் அதன்பிறகு முதல் முறையாக இந்தத் தொடரில் விளையாட உள்ளார்.

இந்திய அணிக்காக 180 போட்டிகளில் விளையாடி இருக்கும் தினேஷ் கார்த்திக், கடைசியாக ஐபிஎல் 2024 கிரிக்கெட் தொடரில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்காக விளையாடினார். அதன்பிறகு இவர் பெங்களூர் அணியின் பட்டிங் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3190

ஐங்கரன்




பிருந்தா




சிவானுஜா




தனுசியா




துஷாந்தினி




தன்விகா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மக்கள் நிராகரித்த தலைவர்களுக்கு மீண்டும் இடமளிக்கக் கூடாது



(கொழும்பு)

மக்களால் நிராகரிக்கப்பட்ட தரப்பினரை மீண்டும் ஆட்சியமைக்க இடமளிக்கக் கூடாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நேற்று செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் கருத்துரைத்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த தலைவர் ஒருவரைத் தெரிவு செய்ய முடியாத நிலை காணப்படுகிறது. முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன 9 வருடங்களுக்கும் அதிக காலம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகக் கடமையாற்றிய போதிலும் அவருக்குப் பின்னர் தலைவர் ஒருவர் உருவாக்கப்படவில்லை.

இதன் காரணமாக சிலர் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டனர்.

அதேபோன்று ஐக்கிய தேசிய கட்சியிலும் இவ்வாறான நிலைமை காணப்படுகிறது. பல ஆண்டுகளாக அதில் தலைவராக உள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதன் அடுத்த தலைவரைத் தெரிவு செய்வதற்குத் தயாராக இல்லை.

இவ்வாறான நிலையில் அதிகாரத்துக்காக சிலர் அரசாங்கத்துடன் இணைந்துள்ளனர்.

எனினும் பாரிய ஆர்ப்பாட்டங்களின் ஊடாக மக்களால் நிராகரிக்கப்பட்ட தரப்பினரை மீண்டும் ஆட்சியமைக்க இடமளிக்கக் கூடாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். (நி-6)

# இராணுவத்தின் உயர் அதிகாரிகள் சிலர்

# சதிப்புரட்சிக்கு முயற்சி

## மொட்டு எம்.பி பரபரப்புத் தகவல்

(கொழும்பு)

2022 அரகலயவின் போது இராணுவத்தின் உயர் அதிகாரிகள் சிலர் இராணுவ புரட்சிக்கான முயற்சிகளில் ஈடுபட்டனர் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே தெரிவித்துள்ளார்.

அரசியல் தலைவர்கள் அது மீண்டும் இடம்பெறுவதற்கு அனுமதிக்க கூடாது என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

2022 இல் இராணுவத் தலைவர்களாலும் பாதுகாப்பு தரப்பின் உயர் மட்டத்தினராலும் நாட்டின் தலைவரை பாதுகாக்க முடியவில்லை.

கோட்டாபய ராஜபக்சவின் தனிப்பட்ட இல்லத்திற்கு சவேந்திர சில்வா பாதுகாப்பை வழங்க மறுத்தார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வேளை முன்னாள் ஜனாதிபதி என்னை அழைத்து மிரிஹானவில் உள்ள தனது வீட்டிற்கு பாதுகாப்பை அதிகரிக்குமாறு இராணுவத் தளபதியிடம் வேண்டுகோள் விடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இராணுவ வாகனங்களை பயன்படுத்தி மிரிஹானவிற்கு செல்லும் வீதிகளை மூடுமாறு நான் கேட்டுக்கொண்டேன்.

ஆனால் அதனை ஏற்க மறுத்த சவேந்திரசில்வா, எங்கள் ஆட்களை பயன்படுத்தி ஆர்ப்பாட்டக்காரர்களை தாக்குமாறு கேட்டுக் கொண்டார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் விடயங்களில் இராணுவம் தலையிட முடியாது என சவேந்திர சில்வா தெரிவித்தார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)


லங்கா மஹால் (PVT) LTD

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (227)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 0091956615671 9

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974



9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்.திரு.மாணிக்கம் சண்முகராஜா

(வில்லுத்தகடு இராஜன்,இராஜன் மினிபஸ் உரிமையாளர்)

திதி:- 08.08.2024



அன்பின் திருவுருவே!
எட்ட முடியாத தொலைவு சென்று
ஆண்டு ஒன்பதல்ல ஓராயிரம் ஆகலாம்
காலங்கள் விடை பெறலாம்
நெஞ்சில் பதிந்த நினைவலைகள்
என்றென்றும் நம்மை விட்டு நீங்காது.

தோற்றம் 24.05.1955 மறைவு 08.08.2015

82/17, 3 ஆம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(228) குடும்பத்தினர்.


# இராசிபலன்

08.08.2024
ஆடி 23, வியாழக்கிழமை
சதுர்த்தி முன்னிரவு 11.34 மணிவரை
உத்தரம் முன்னிரவு 11.25 மணிவரை

சுபநேரம்- 7.34-9.04 மணிவரை
இராகுகாலம்-1.34-3.04 மணிவரை
நாக சதுர்த்தி விரதம்

சந்திராஷ்டமம்
உத்தராடம், திருவோணம்.

வளவன்

**மேஷம்** — மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், தேக நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**ரிஷபம்** — பிள்ளைகளின் தேவையறிந்து செயற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள்.

**மிதுனம்** — பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் பயணங்களின் போது பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கடகம்** — காரிய வெற்றிக்கு கணபதியை வழிபட வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு, புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், போசன சுகமுண்டு.

**சிம்மம்** — புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள்.

**கன்னி** — புதிய அனுபவங்கள் ஏற்படும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**துலாம்** — புகழ் மிக்கவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், பணப்புளக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளும் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.

**விருச்சிகம்** — குடும்பத்தில் குதூகலம் கூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, புகழ் பெற்றவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**தனுசு** — பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், புதிய முயற்சிகள் கைகூடும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மகரம்** — அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள்.

**கும்பம்** — குடும்ப பொறுப்புக்கள் கூடும், கவலைகள் தீர கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், சிலர் பாராட்டுவது போல உங்களை விமாசிக்கலாம்.

**மீனம்** — நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, சொந்த பந்தங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள்.

**தீய எண்ணங்களை உனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளாதே.**

# ஆழியவளை பகுதியில் வீடொன்று தீக்கிரை

## பொலிஸில் முறைப்பாடு



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு, ஆழியவளை பகுதியைச் சேர்ந்த தபால் ஊழியர் ஒருவரின் வீடொன்று நேற்று முன்தினம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

தபால் ஊழியர் தனது மனைவி மற்றும் குழந்தையுடன் வெளியில் சென்ற வேளை வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்த கும்பல் ஒன்று வீட்டிற்கு தீ வைத்து விட்டு தப்பி சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-6-33)

# குரு முதல்வரை சந்தித்த

## ஜனாதிபதி வேட்பாளர் விஜேயதாச



(யாழ்ப்பாணம்)

யாழிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி வேட்பாளர், கலாநிதி விஜேயதாச ராஜபக்ஷ யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜோ. ஜெபரட்ணம் அடிகளாரை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இந்த சந்திப்பு நேற்று மதியம் யாழ். ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது. (நி-6-33)

# கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் கைது

## 227 போத்தல் கோடா மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். கொழும்புத்துறை பகுதியில் கசிப்பு காய்ச்சி விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கோப்பாய் பகுதியைச் சேர்ந்த 21 வயது இளைஞனை கைது செய்துள்ளனர்.

இதன்போது 227 போத்தல் கோடாவும், கசிப்பு காய்ச்சும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டது.

குறித்த சந்தேக நபர் கொழும்புத்துறையிலும் வட்டுக்கோட்டையிலும் வீடுகளை வாடகைக்கு எடுத்து கசிப்பு காய்ச்சி பல இடங்களில் விற்பனையில் ஈடுபட்டாரென பொலிஸார் தெரிவித்தனர். (நி-6-33)

# வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி ஏமாற்றியவரை தாக்கியவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டிற்கு அனுப்பி வைப்பதாக கூறி ஏமாற்றிய நபரை தாக்கி அவரிடம் இருந்து 5 இலட்ச ரூபாய் பணத்தினை பறிமுதல் செய்த குற்றச்சாட்டில் சகோதரர்கள் இருவர் கைதான நிலையில் நேற்று முன்தினம் அந்நபர்கள் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய போது இருவரையும் எதிர்வரும் 13ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

யாழைச் சேர்ந்த இளைஞன் ஒருவர், பிரான்ஸ் நாட்டிற்கு செல்வதற்காக நீர்கொழும்பு பகுதியை சேர்ந்த நபர் ஒருவரிடம் 25 இலட்ச ரூபாய் பணத்தினை வழங்கியுள்ளார்.

பணத்தினை பெற்றுக்கொண்ட நபர் சிங்கப்பூருக்கு அழைத்துச் சென்று விட்டு, மீண்டும் இலங்கை அழைத்து வந்துள்ளார்.

மீண்டும் பிரான்ஸ் நாட்டிற்கு அனுப்பி வைப்பதாக நீண்ட நாட்களாக ஏமாற்றி வந்த நிலையில் நீர்கொழும்பை சேர்ந்த நபர் யாழ் வந்திருந்த வேளை அதனை அறிந்த பாதிக்கப்பட்ட இளைஞனும், அவரது சகோதரனும் நீர் கொழும்பு வாசியுடன் முரண்பட்டு அவரை தாக்கி அவரிடம் இருந்து 05 இலட்ச ரூபாய் பணத்தினை பறிமுதல் செய்துள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான நபர் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததை அடுத்து முறைப்பாட்டின் பிரகாரம் தாக்குதல் நடத்திய சகோதரர்கள் இருவரையும் கைது செய்து விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்திய வேளை இருவரையும் விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டுள்ளது. (நி-6-33)



சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரியில் விளையாட்டு வீரர்களுக்கான சகல வசதிகளையும் கொண்ட புதிய ஓய்வு அறைக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு கல்லூரியின் அதிபர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆரோக்கியமான நகர பங்குதாரர்களின் கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை காலை 11 மணி தொடக்கம் மதியம் 1 மணி வரை வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது என யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி பேராசிரியர் ஆர். சுரேந்திரகுமாரன் அறிவித்துள்ளார். (நி-6)

(யாழ்ப்பாணம்)

வட மாகாண வங்கி ஓய்வு நிலை வங்கியாளர் நலன்புரிச் சங்கத்தின் ஒன்றுகூடல் நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி முதல் யாழ்ப்பாணம் கே. கே. எஸ் வீதியில் அமைந்துள்ள யாழ். வண்ணார் பண்ணை நாவலர் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது என குறித்த சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (நி-6)

# வலி.வடக்கில் நிறுத்தல் கருவிகளுக்கு முத்திரையிடல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் நிர்வாகப் பிரிவுக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களிலும் நிறுக்கும், அளக்கும் உபகரணங்கள் சரிபார்த்தல் மற்றும் முத்திரை பதித்தல் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அந்த வகையில் எதிர்வரும் 12,13 ஆம் திகதிகளில் மல்லாகத்திலும், 14 ஆம் திகதி கிராமக்கோட்டடி மயிலிட்டி மற்றும் 13, 16, 17 ஆம் திகதிகளில் தெல்லிப்பளை ஆகிய பகுதிகளில் குறித்த வேலைத்திட்டம் இடம் பெறவுள்ளது என வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் செயலாளர் சு. சுதர்ஜன் அறிவித்துள்ளார். (நி-6)

# யாழ். புத்தக கண்காட்சி நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வர்த்தக தொழிற்துறை மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ். புத்தக கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். கலாசார மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இலங்கையிலிருந்து மட்டுமல்லாமல் பல்வேறு நாடுகளில் இருந்தும் பல்வேறுபட்ட புத்தக விற்பனை நிறுவனங்கள் மற்றும் வெளியீட்டகங்களின் புத்தகங்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படவுள்ளது.

இக் கண்காட்சி முற்றிலும் இலவசமாக பார்வையிட முடியும். 40 காட்சி கூடங்கள் அமைக்கப்படும். அவற்றில் உள்ளூர், வெளியூர் எழுத்தாளர்களின் புத்தகங்களை காட்சிப்படுத்தவுள்ளோம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்தகண்காட்சி எதிர்வரும் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை வரையில் மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளது. (நி-6-33)

# மன்னார் இளம் தாயின் இறப்பிற்கு நீதியான விசாரணை வேண்டும்

## பாராளுமன்றில் செல்வம் எம்.பி



(கொழும்பு)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் உயிரிழந்த மரியராஜ் சிந்துஜாவின் இறப்பிற்கு நீதியான விசாரணை மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் பணி நீக்கம் செய்யப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர் "மரியராஜ் சிந்துஜாவின் இறப்பு அநியாயமாக கொல்லப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எங்களைப் பொறுத்தவரை இந்த விசாரணை ஆட்களை மாற்றம் செய்கின்ற விசாரணையாக இருக்கக் கூடாது. ஒரு நீதியான விசாரணையின் ஊடாக அவர்கள் பணிநீக்கம் செய்யப்பட வேண்டும்.

நீதியான விசாரணை மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும் என்பதே எங்களுடைய பிரதான கோரிக்கையாகும்.

அதைவிட எங்களுடைய வைத்தியசாலைக்கு வர இருக்கின்ற 9 வைத்தியர்களினுடைய பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டும்.

உறுதிப்படுத்தாவிடில் அந்த வைத்தியர்கள் எங்களுடைய வைத்தியசாலைக்கு வருவது கடினமாக இருக்கும்" என தெரிவித்தார். (நி-6)

# 7 மாதங்களில் 197 யானைகள் பலி

(கொழும்பு)

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் 197 யானைகள் உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.



விபத்துக்கள் மற்றும் யானை - மனித மோதல்களினால் அதிகளவான யானைகள் உயிரிழந்ததாக அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம் இந்தக் காலப்பகுதியில் யானைகளின் தாக்குதல்களினால் 73 பேர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி-6)

# பெரமுனவிலிருந்து வெளியேறியவர்களை மீண்டும் இணையுமாறு நாமல் அழைப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முதல் சக்தியாக மாறும் என பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆதரவாளர்களிடம் தேர்தலில் நம்பிக்கை வைத்து தனது கட்சி மீது நம்பிக்கை வைக்குமாறு கூறிய நாமல் கட்சியை விட்டு வெளியேறியவர்களை மக்களிடம் விவாதித்து ஒரு உடன்பாட்டுக்கு வந்து மீண்டும் இணையுமாறு வேண்டுகோள் விடுத்தார். (நி-6)

# தேர்தல் முடிவு நாட்டு மக்களிடம்

(கொழும்பு)

புதிய பாராளுமன்றத்தின் கீழ் உள்ளூர் ஊடகவியலாளர்களின் பிரச்சினைகள் மற்றும் முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு ஊடக ஆணைக்குழுவொன்றை உருவாக்கவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



பிரதேச ஊடகவியலாளர்களைப் பாராட்டும் விதமாக நாடளாவிய பிரதேச ஊடகவியலாளர்கள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "பிரதேச ஊடகவியலாளர்களுக்கு தமது பிரச்சினைகளையும் முறைப்பாடுகளையும் தெரிவிப்பதற்கான ஒரு இடம் தேவை.

பத்திரிகை சபைக்கு பதிலாக ஊடக ஆணைக்குழுவை நிறுவுவதற்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பிரதேச ஊடகவியலாளர்களின் முறைப்பாடுகளை விசாரிக்க அதிகாரம் வழங்கப்பட வேண்டும். அடுத்த புதிய பாராளுமன்றத்தில் அது குறித்து கவனம் செலுத்துவோம்.

நாட்டை மீட்க சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து உடன்பாடுகளை எட்டியுள்ளோம்.

அந்த நிபந்தனைகளை யாராலும் நீக்க முடியாது. அந்த நிபந்தனைகளை மாற்றினால், சர்வதேச நாணய நிதியம் அதிலிருந்து விலகும். அதனால் நம் நாட்டுக்கு கிடைக்கும் பணத்தை இழக்க நேரிடும்.

எனவே எந்த வழியில் செல்ல வேண்டும் என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும். அந்த முடிவை நாட்டு மக்களிடமே விட்டுவிட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். நான் ஒரு போதும் தேர்தலை ஒத்திவைக்க விரும்பவில்லை. தேர்தலை ஒத்திவைக்கப் போவதாக சிலர் கூச்சலிட்டனர். ஆட்சியை கொடுத்ததும் ஓடிப்போய் தேர்தல் நடத்துவதில் அர்த்தமில்லை" என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1991-இந்து<br>நட்சத்திரம்:பூராடம்<br>கி.பா:22<br>10ல் சூரிசெவ்<br>உயரம் : 6'1"<br>தகைமை/தொழில்:A/L, Manager (France)<br>எதிர்பார்ப்பு:நற்குணமுள்ள மணமகள்<br>தொ.இ: B/14701 | பிறப்பு: 1995-இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>கி.பா-63 3/4<br>உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்:சித்த மருத்துவர்<br>எதிர்பார்ப்பு:Engineer, Doctor, Lecturer<br>தொ.இ: G/14703 |
| பிறப்பு:1987-இந்து<br>நட்சத்திரம்:பூராடம்<br>கி.பா:28 1/4<br>உயரம் :6<br>தகைமை/தொழில்:A/L, Driver(Canada)<br>எதிர்பார்ப்பு:நற் குணமுள்ள மணமகள்<br>தொ.இ: B/14702 | பிறப்பு:1995-இந்து<br>நட்சத்திரம்:ஆயிலியம்<br>கி.பா:39 1/2<br>உயரம் : 5'<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:சொந்த தொழில்<br>தொ.இ: G/14704 |
| பிறப்பு:1969-இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம்<br>கி.பா:20 உயரம் :5'9"<br>தகைமை/தொழில்:Diploma in Computer Scicnce, Manager(Australia)<br>எதிர்பார்ப்பு:படித்தவர்கள், விவாகரத்தாகி பிள்ளைகள் அற்றவர்கள்<br>தொ.இ: B/14705 | பிறப்பு:1991-இந்து<br>நட்சத் திரம்:மூலம்<br>கி.பா:-11<br>உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்:A/L, தையல்<br>எதிர்பார்ப்பு:தகுதியான மணமகன்<br>தொ.இ: G/14708 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்

# வயநாடு மீட்பு பணிக்கு என்னையும் சேர்த்துக்கோங்க

## இராணுவத்திற்கு 3 ஆம் வகுப்பு மாணவன் கடிதம்



(டில்லி)

வயநாடு மாவட்டம் முண்டகை, சூரல்மலை, மேப்பாடு ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி 400 இற்கும் மேற்பட்டோர் பலியானார்கள். தொடர்ந்து வயநாட்டில் மீட்பு பணியில் முப்படைகளும் இணைந்து செயற்பட்டு வருகிறது. இந்த நிலையில் 3 ஆம் வகுப்பு படிக்கும் மாணவன் ரயான் என்ற சிறுவன் இந்திய இராணுவத்திற்கு ஒரு கடிதம் எழுதி உள்ளான்.

அதில் வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவில் இராணுவத்தினர் பல்வேறு இன்னல்களை சந்திப்பதோடு, இக்கட்டான இடங்களிலும் மீட்பு பணிகளை துரித கதியில் செய்து வருகிறார்கள்.

மேலும் பெய்லி பாலம் அமைத்து மீட்பு பணியில் இறங்கி உள்ளார்கள். இராணுவத்தினர் உணவுகளாக பிஸ்கட் சாப்பிடுவதை வீடியோவில் பார்த்தேன்.

அதனை மட்டும் சாப்பிட்டு சவாலான பணிகளை மேற்கொண்டு வருகிறீர்கள். மீட்பு பணியில் ஈடுபடுவதை பார்த்து மகிழ்ச்சி அடைந்தேன். அதனால் இந்திய இராணுவத்திற்கு மகிழ்ச்சியுடன் சல்யூட் அடித்துக் கொள்வதோடு, நானும் இராணுவத்தில் இணைந்து மீட்பு பணியில் ஈடுபட ஆர்வமாக உள்ளேன் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது.

இந்த நிலையில் சிறுவன் ரயான் எழுதிய கடிதத்திற்கு பதில் தெரிவித்து இந்திய இராணுவம் எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருந்தது.

சிறுவன் ரயானின் இதயப்பூர்வமான வார்த்தைகள் எங்களை ஆழமாக தொட்டன. இக்கட்டான காலங்களில் நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாக இருக்க வேண்டும் என்பதை நோக்கமாக கொண்டு உள்ளோம். நீங்கள் அனுப்பிய கடிதம் இந்தப் பணியினை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. உங்களை போன்ற ஜாம்பவான்கள் இராணுவத்தில் இணைவது பெருமையே. நீங்கள் இராணுவ சீருடை அணிந்து எங்களின் பக்கத்தில் நிற்கும் நாளை நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். நாம் ஒன்றுபட்டு நமது தேசத்தை பெருமைப்படுத்துவோம் என்று கூறப்பட்டு இருந்தது.

சிறுவன் ரயான் இராணுவத்திற்கு எழுதிய கடிதம் சமூக வலைத்தளங்களில் வைரல் ஆனது. மேலும் சிறுவனின் இந்த செயலை பலரும் பாராட்டி வருகிறார்கள். (நி-6)

# வேகமெடுக்கும் அமீபா

(டில்லி)

இந்தியா-கேரளாவில் மூளையை உண்ணும் பக்ரீரியாவான அமீபா காய்ச்சல் மிகவும் வேகமாக பரவி வருகிறது.

இந்நிலையில் திருவனந்தபுரத்தில் மேலும் 4 பேருக்கு அமீபா மூளைக் காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக கேரளா அரசு தெரிவித்துள்ளது.

கடந்த 23ஆம் திகதி திருவனந்தபுரம் கன்னரவிளையைச் சேர்ந்த நபரொருவர் அமீபா மூளைக் காய்ச்சலினால் உயிரிழந்தார்.

மேலும் அவரது நண்பர்கள் நான்கு பேருக்கும் மூளைக் காய்ச்சலுக்கான அறிகுறிகள் தென்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# மீண்டும் வெடித்த எட்னா எரிமலை



(வத்திக்கான்)

ஐந்தாவது முறையாக இத்தாலியின் மவுண்ட் எட்னா எரிமலை வெடிக்கத் தொடங்கியது.

இதனால் விமானங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. இருப்பினும், தொடர்ந்து எரிமலை வெடிப்பதால் மேலும் தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.

எட்னா மலை கடந்த ஞாயிற்றுக்கிழமை வெடிக்கத் தொடங்கியதாக இத்தாலியின் தேசிய புவி இயற்பியல் மற்றும் எரிமலையியல் நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி-6)

### ஒரு வாரத்திற்கு பிறகு

# உரிமையாளரை சந்தித்த நாயின் பாசப் போராட்டம்



(டில்லி)

வயநாடு நிலச்சரிவில் நூற்றுக்கணக்கானவர்கள் பலியாகியிருக்கும் நிலையில், ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிர் தப்பியிருக்கின்றனர்.

ஒருசிலரை தவிர பெரும்பாலானவர்கள், நிலச்சரிவில் தங்களின் குடும்பத்தினர் மற்றும் உறவுகளை இழந்துவிட்டனர்.

அவர்கள் கண்ணீர் வடித்தபடி நிவாரண முகாம்களில் தங்கியிருக்கின்றனர்.

பலர் மண்ணோடு புதைந்தது, வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது உள்ளிட்டவைகளை நேராக பார்த்த அவர்கள், அந்த காட்சிகளை மறக்க முடியாமல் தவித்து வருகின்றனர்.

நிவாரண முகாம்களில் தங்கியிருக்கும் பலரது குடும்பத்தினர் இன்னும் கிடைக்காமல் இருக்கின்றனர்.

இதனால் அவர்கள் தங்களது உறவுகளை கண்டு பிடிக்க உடல்கள் வைக்கப்பட்ட மருத்துவமனைகள் மற்றும் நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிகளுக்கு சென்று தங்களின் உறவுகளை தேடி வருகின்றனர். அதுமட்டுமின்றி சிலர் தாங்கள் செல்லமாக வளர்த்த நாய் உள்ளிட்ட வீட்டு வளர்ப்பு பிராணிகளையும் தேடி அலைகிறார்கள்.

அப்படி தேடியதில் பெண் ஒருவர் தனது செல்ல நாயை ஒரு வாரத்திற்கு பிறகு பார்த்து உள்ளார். நாய் மற்றும் பெண்ணுக்கு இடையே நடந்த பாசப் போராட்டத்தைப் பார்த்த அனைவரையும் கலங்க செய்தது. (நி-6)

# ரஷ்யாவிற்குள் நுழைந்து உக்ரைன் தாக்குதல்



(மொஸ்கோ)

உக்ரைனிய படையினர் எல்லையை கடந்து வந்து ரஷ்யாவிற்குள் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என ரஷ்யா தெரிவித்துள்ளது.

உக்ரைன் இராணுவத்தைச் சேர்ந்த 300 பேர் எல்லை கடந்து ரஷ்யாவிற்குள் நுழைந்து தாக்குதலை மேற்கொண்டனர். இவர்கள் 10 கிலோமீற்றர் வரை ஊடுருவினர் என ரஷ்ய இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

11 டாங்கிகள் 20 இற்கும் மேற்பட்ட கவசவாகனங்களின் உதவியுடன் இந்த தாக்குதலை உக்ரைனியப் படையினர் முன்னெடுத்தனர் என ரஷ்ய பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (நி-6)

# ட்ரம்பை கொலை செய்ய திட்டம்!

## ஈரான் உளவாளி அமெரிக்காவில் கைது

**(வோஷிங்டன்)**

**அமெரிக்காவில் பாகிஸ்தானைச் சேர்ந்த ஈரான் உளவாளி ஆசிப் மெர்ச்சன்ட் (வயது 46) என்பவரை உளவுத்துறையினர் சமீபத்தில் கைது செய்துள்ளனர்.**




அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உட்பட பல முக்கிய அரசியல் கட்சிச் தலைவர்களை கொல்ல சதித் திட்டம் தீட்டியது தெரிய வந்துள்ளது.

பாகிஸ்தானில் இருந்து அமெரிக்கா புறப்படுவதற்கு முன்பு ஆசிப் மெர்ச்சன்ட் ஈரான் சென்று வந்ததாகவும் அமெரிக்காவில் அரசியல் கொலைகளை செய்வதற்காக சதித்திட்டத்துடன் அவர் ஈரானில் இருந்து வந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, அமெரிக்காவில் தனது சதித்திட்டத்தை நிறைவேற்ற சிலரை அணுகியுள்ளார்.

ஆனால் அந்த நபர்கள் பொலிஸ் அதிகாரிகள் ஆவார்கள். கூலிப்படை போல் நடித்த அதிகாரிகளிடம் ஆசிப் மெர்ச்சன்ட் தனது திட்டத்தை தெரிவித்துள்ளார்.

ஆவணங்களைத் திருடுதல், அரசியல் பேரணிகளில் போராட்டங்களை ஏற்பாடு செய்தல், ஒரு அரசியல் நபரை கொல்வது ஆகிய மூன்று திட்டங்களை அவர் தெரிவித்துள்ளார். மேலும் முற்பணமாக 5 ஆயிரம் அமெரிக்க டொலர்களை கொடுத்துள்ளார்.

அதன்பின் அமெரிக்காவில் இருந்து புறப்பட முயன்ற போது ஆசிப் மெர்ச்சன்ட்டை கைது செய்தனர்.

இதுதொடர்பாக பொலிஸார் தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையில் டொனால்ட் ட்ரம்பை கொலை செய்ய சதித் திட்டம் தீட்டினார் என்று நேரடியாக தெரிவிக்கப்படவில்லை.

ஆனால் சில முக்கிய ஆதாரங்களின் படி ட்ரம்பை கொலை செய்யும் திட்டமும் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் இராணுவத் தளபதி காசிம் சுலைமானி ஈராக் சென்றபோது அவரை அமெரிக்கா கொலை செய்தது. இதற்கு பதிலடியாக முன்னாள் ஜனாதிபதி ட்ரம்பை பழி வாங்குவோம் என்று ஈரான் தெரிவித்து இருந்தது.

இந்த நிலையில் ஈரான் உளவாளி அமெரிக்காவில் கைது செய்யப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

# நேபாளத்தில் ஹெலிகொப்டர் விபத்து

## 5 பேர் உயிரிழப்பு

(காத்மண்டு)

நேபாளம் காத்மண்டுவில் இருந்து ரசுவா நோக்கி சென்றுகொண்டிருந்த ஹெலிகொப்டர் திடீரென கட்டுப்பாட்டை இழந்து விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது.

ஏர் டைனஸ்டி என்கிற ஹெலிகொப்டர் நேற்று பிற்பகலில் நுவாகோட்டின் ஷிவ்புரி பகுதியில் விபத்துக்குள்ளானது.

இந்த ஹெலிகொப்டர் விழுந்து நொறுங்கி ஏற்பட்ட தீ விபத்தில் 5 பேர் தீயில் கருகி உயிரிழந்துள்ளனர். இதுதொடர்பாக வெளியான அறிக்கையின் படி, ஹெலிகொப்டர் காத்மண்டுவில் இருந்து ரசுவா நோக்கிச் சென்று கொண்டிருந்த போது, நுவாகோட் மாவட்டத்தில் உள்ள சூர்யா சவுர்-7 என்ற மலையில் மோதியுள்ளது.




விபத்து குறித்து தகவல் கிடைத்ததும், அதிகாரிகள் மீட்புக் குழுவை சம்பவ இடத்துக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் ஹெலிகொப்டர் காத்மண்டுவில் இருந்து பிற்பகல் 1:54 மணிக்கு புறப்பட்டதாகக் கூறப்படுகிறது. சூர்யா சவுரை அடைந்த பிறகு, ஹெலிகொப்டர் அதிகாரிகளுடனான தொடர்பை இழந்தது. ஹெலிகொப்டர் புறப்பட்ட மூன்று நிமிடங்களில் தொடர்பை இழந்து விபத்துக்குள்ளானது குறிப்பிடத்தக்கது. இந்த விபத்து தொடர்பாக அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (நி-6)

# விருந்தகத்திற்கு தீ வைத்த ஆர்ப்பாட்டக்காரர்கள்

## 24 பேர் உயிரிழப்பு



(டாக்கா)

பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவருக்குச் சொந்தமான விருந்தகத்திற்கு போராட்டக்காரர்கள் தீ வைத்துள்ளனர்.

இந்த தீ விபத்தில் இந்தோனேசியா பிரஜை உட்பட 24 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (நி-6)

# சியெட் களனி மொனராகலையின் இறப்பர் பயிர்ச்செய்கையாளர்களின் பிள்ளைகளின் பாடசாலை கல்விக்கு உதவுகிறது



இலங்கையின் மொனராகலை மாவட்டத்தில் வாழும் இறப்பர் செய்கையினை மேற்கொள்ளும் விவசாயிகளின் பாடசாலை செல்லும் பிள்ளைகள், நாட்டின் இயற்கை இறப்பரின் மிகப்பெரிய உள்நாட்டு பாவனையாளர்களில் ஒன்றான சியெட் களனி ஹோலடிங்ஸின் (CEAT Kelani Holdings) சமூகப் பொறுப்புணர்வு முயற்சியின் சமீபத்திய பயனாளிகளாகியுள்ளனர்.

மொனராகலை, நக்கல, வித்யார்த்த மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 120 மாணவர்களுக்குத் தேவையான பாடசாலைப் பைகள், பாடசாலை சப்பாத்துகள் மற்றும் அப்பியாசப் பயிற்சி புத்தகங்களை நிறுவனம் வழங்கியதுடன், இதன் மூலம் நிறுவனம் அதன் மிக முக்கியமான பங்குதாரர் குழுக்களில் ஒன்றிற்கு தனது ஆதரவைத் தொடர்ந்து வழங்கி வருகிறது.

இலங்கையின் நியூமேடிக் டயர் தேவைகளில் பாதியை உற்பத்தி செய்யும் சியெட் களனி ஹோல்டிங்ஸ், வேலைக்கு அமர்த்தியுள்ள 10,000 விவசாய குடும்பங்களான உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து அதன் இயற்கை இறப்பர் தேவையில் 100 சதவீதத்தைப் பெறுகிறது.

இந்தத் திட்ட முயற்சியின் காரணத்தை விளக்கி சியெட் களனியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி ஷமல் குணவர்தன தெரிவிக்கையில்: "இறப்பர் பயிரிடுபவர்கள் எங்கள் விநியோகச் சங்கிலியின் ஒரு முக்கிய அங்கமாகும். இதனால் அவர்களின் நல்வாழ்வை எங்கள் வெற்றியுடன் ஒருங்கிணைக்கிறோம். அவர்களின் குழந்தைகளை பாடசாலைகளில் படிக்க வைப்பதன் மூலம் அவர்களின் அபிலாஷைகளை ஆதரிப்பதுடன் மட்டுமல்லாமல், இந்தத் திட்ட முயற்சியானது ஒரு பரந்த சமூகக் கடமையையும் நிறைவேற்றுகிறது.

இலங்கையில் குரொஸ் பிளை மற்றும் ரேடியல் டயர் வகைகளில் மிக அதிக அளவானவற்றை உற்பத்தி செய்யும் சியெட் களனி உற்பத்திகள் ரேடியல் வாயு மூல உற் பத்திகள் (பயணிகள் கார் கள், வேன்கள் மற்றும் விளை யாட்டுரக வாகனங்கள்) வர்த்தக உற்பத்திகள் (பயர்ஸ் - பிளை மற்றும் ரேடியல்) மோட்டார் சைக்கிள், முச்சக் கரவண்டிகள் மற்றும் விவ சாயரக வாக னங்கள் என் பனவற்றை உள்ளடக்கியது. இத்தாலியில் உருவான சியெட் வர்த்தக நாமம் ஜேர்மனியின் உற்பத்தி தொழில்நுட்ப மற்றும் தீவிர ஆராய்ச்சி பின்னணியில் இந்தியாவிலும் ஐரோப்பாவிலும் உள்ள பரிசோதனை வளா கங் களில் தீவிர சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதாகும்.

சியெட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவனம் அதன் உற் பத்திகளில் சுமார் 20 வீதத்தை உலகின் 16 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றது. இதன் மூலம் தேசிய பொருளா தாரத்துக்கு அந்நிய செலவாணிகளை சேகரிக்கும் விடயத்திலும், இறக்குமதி செய்யப்படும் டயர்கள் மீதான சார்பு நிலையிலிருந்து விடுவிற்பதிலும் பெரும் பங்களிப்பை வழங்குகின்றது.

# வர்த்தக உலகம்

# டயலொக் அனுசரணையில் விளையாட்டையும் பொழுதுபோக்கையும் கொண்டாடும் Srilanka Sports Fiesta 2024




இலங்கை விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு சுற்றுலாத்துறை அமைச்சுடன் இணைந்து ஒழுங்குபடுத்தும் Srilanka Sports fiesta 2024 கொழும்பில் ஓகஸ்ட் மாதம் 16 முதல் 18 ஆம் திகதி வரை நடைபெறும். இதற்கு இலங்கையின் விளையாட்டுத்துறைக்கு தன்னிகரில்லா ஆதரவை நல்கும் நிறுவனம் என்ற ரீதியில் இலங்கையின் முதல்தர இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசி ஆட்டா பிஎல்சி தன் அனுசரணையை வழங்குகிறது. இந் நிகழ்வு இதுவரை காலமும் இலங்கையில் நடந்திரா ஒரு விளையாட்டுத் திருவிழாவாக இருக்கும் என்பதோடு தெற்காசியாவில் இது போன்றதொரு நிகழ்வு இதுவே முதல்முறை எனலாம். இத் திருவிழாவில் 600 மெய்வல்லுனர்கள் கிரிக்கெட், ரக்பி, காற்பந்து, கரப்பந்து, வலைப்பந்து,ஹொக்கி மற்றும் கூடைப்பந்து என ஏழு விதமான போட்டிகளில் மோத வுள்ளனர்.

நம் நாட்டு திறமைசாலிகளுக்கு ஓர் களம் அமைப்பதோடு அடுத்த தலைமுறை மெய்வல்லுனர்களை ஊக்குவிக்கும் வகையில் வடி வமைக்கப்பட்டுள்ள Srilanka Sports fiesta 2024 விளையாட்டு வீரர்கள் தங்கள் திறன்களை வெளிப்படுத்தவும் உயர்மட்டத்தில் போட்டியிடவும் ஒரு களத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒவ்வொரு விளையாட்டும் தனது தனித்துவமான பொழுதுபோக்கைக் கொண்டுள்ளதால் பார்வையாளர்கள் பரபரப்பான போட்டிகளை எதிர்பார்க்கலாம். நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் இதனை ஒரு வருடாந்த நிகழ்வாக நடாத்தி ஒவ வொரு வருடமும் மெய்வல்லுனர்களுக்கு வாய்ப்புகளை தொடர்ந்து வழங்க உத்தேசித்துள்ளனர்.

கிரிக்கெட் இரசிகர்களுக்கு அணிகள் வெற்றிக்காக மோதும் போது கடுமையான போட்டிகளும் சுவாரஸ்யமான முடிவுகளும் காத்திருக்கின்றன. ரக்பி விரும்பிகள் சக்தி வாய்ந்த டேக்கிள்கள் மற்றும் துரிதமான ஆட்டங்களை எதிர் பார்க்கலாம். இதேவேளை காற்பந்து பிரியர்கள் திறமையான ஆட்டங்கள் மற்றும் மூலோபாய நகர்வுகளை இரசிப்பார்கள். கரப்பந்து மற்றும் வலைப்பந்து போட்டிகள் உச்சகட்ட வேகத்தில் மேல் பறக்கும் ஸ்பைக் மற்றும் விரைவான பாஸ்களுடன் சாமர்த்தியமானவை ஆக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஹாக்கி மற்றும் கூடைப்பந்தாட்டம் வேகம், திறமை, குழுவேலைகளை வெளிப்படுத்தும் ஆச்சரியகரமான ஆட்டத்தை வெளிப்படுத்துவன.

கிரிக்கெட் போட்டிகள் புளூம்ஃபீல்டு மற்றும் தர்ஸ்டன்மை தானங்களில் நடத்தப்படும். ரக்பி மற்றும் கால் பந்து போட்டிகள் ரேஸ் கோஸ் மைதானத்தில் நடைபெறும், கரப்பந்து றோயல் கல்லூரி உள்ளக விளையாட்டு வளாகத்தில் நடைபெறும், வலைப்பந்து போட்டிகள் டோரிங்டன் மைதானத்தில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஹாக்கி விளையாட்டுகள் astroturf மைதானத்திலும் கூடைப்பந்தாட்ட போட்டிகள் 3X3 மைதானத்திலும் நடைபெறும்.

உற்சாகமான சூழலை மேலும் ஊக்குவிக்க இந்த விளையாட்டு விழா இலங்கையின் பிரபலமான கலைஞர்களை கொண்டு இரவுநேர இசைக் கச்சேரிகளை நடத்தும். இந்த கச்சேரிகள் வருகையாளர்களுக்கு நேரடி இசையை அனுபவித்து இரவு முழுவதும் நடனமாட ஒருவாய்ப்பை வழங்கும். கலையுலக நட்சத்திரங்களின் வரிசையில் பல்வேறு இசைவகைகள் இடம் பெறும், இது பலதரப்பட்ட இசை ரசனைக்கேற்ப இருக்கும். இந்த கச்சேரிகள், இலங்கையரின் அனைவரையும் ஒருங்கிணைத்து மகிழ்ச்சியுடன் கொண்டாடும் ஒருதனித்துவமான நிகழ்வின் முக்கிய அம்சமாக இருக்கும்.

முக்கிய அனுசரணையாளராக இருக்கும் டயலொக், இந்த போட்டியை Dialog Television மூலம் The Papare TV (அலைவரிசை 63) Papare TV HD (அலைவரிசை 126) Dialog Viu மற்றும் The Papare.com ஆகியவற் றில் நேரலை ஒளிபரப்பை வழங்கவுள்ளது. இதன்மூலம் இலங்கையின் எல்லா இல்லங்களுக்கும் மொபைல் சாதனங்களுக்கும் நிகழ்வை நேரலையாக கொண்டு சேர்க்கவுள்ளது. விளையாட்டு பிரியர்களின் ஆர்வத்திற்கு ஏற்ப Dialog Television உம் The Papare யும் இந்நிகழ்வின் உத்தியோகபூர்வ ஒளிபரப்புக் கூட்டாளிகளாகவும் டிஜிட்டல் ஊடகக் கூட்டாளிகளாகவும் செயற்படுகின்றன.

உங்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரோடு, இலங்கை விளையாட்டு வரலாற்றின் முக்கிய அத்தியாயத்தை காணத் தயாராகுங்கள். Srilanak Sports Fiesta 2024 உங்களை வரவேற்கிறது. இச்சகாப்தத்தை காணத்தவறாதீர்கள்.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 250 | 200-300 | 280 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 450 | 250 | 500 |
| தக்காளி | 300 | 300 | 300 | 240 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 180 | 100-120 | 200 |
| கோவா | 350 | 380 | 400 | 260 | 400 |
| கரட் | 350 | 350 | 380 | 300 | 400 |
| பூசணி | 180 | 160 | 160 | 150 | 120 |
| புடோல் | 160 | 150 | 160 | 140 | 240 |
| வாழைக்காய் | 250 | 250 | 250 | 200-250 | 300 |
| சின்ன வெங்காயம் | 250 | 350 | 350 | 250-400 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 250 | 220 | 220 | 200 |
| பாகற்காய் | 500 | 500 | 550 | 450 | 500 |
| வெண்டக்காய் | 160 | 180 | 220 | 160-250 | 400 |
| கருணைக் கிழங்கு | 180 | 160 | 160 | 150 | 200 |
| பயற்றங்காய் | 350 | 500 | 200 | 300-400 | 400 |
| லீக்ஸ் | 520 | 500 | 360 | 300 | 400 |
| பீற்றூட் | 350 | 350 | 180 | 350 | 300 |
| கறிமிளகாய் | 800 | 1000 | 800 | 400 | 1000 |
| முருங்கைக்காய் | 100 | 140 | 150 | 50-70 | 120 |
| போஞ்சி | 600 | 600 | 700 | 350 | 700 |
| கத்தரிதம்புள்ள | 250 | 200 | 250 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 40 | 60 | 80 |
| தேசிக்காய் | 600 | 600 | 600 | 400-500 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 70 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 650 | 150 | 700 |
| வெங்காயப்பூ | 200 | 150 | 230 | -- | 320 |
| முள்ளங்கி | 100 | 100 | 100 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 50 |
| ஈரப்பலா | 100 | 80 | 50 | 80 | 60 |

# இன்று ஒரு தகவல் 206

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மருத்துவமனை பண்பாடுகள்

நமக்கு வேண்டப்பட்ட ஒருவர் மருத்துவமனையிலே அட்மிட் ஆகியிருக்கின்றார். அவரைப் பார்த்து விட்டு வரலாம் என்று போகின்றேன். அந்த சமயத்திலே நாம் எப்படி நடந்து கொள்வது? அதற்கு அமெரிக்க டாக்டர் ஒருவர் சில ஆலோசனைகளைச் சொல்லி இருக்கின்றார். படுத்திருக்கின்ற ஒருவர் விரைவாக குணமாகி எழுந்திருப்பது அவரைப் பார்க்க வருபவர்களை பொருத்தும் இருக்கின்றதாம்.

ஒரு நோயாளி ஒரு அறைக்குள்ளே தனியாகப் படுத்திருக்கின்றார் என்றால் அந்த தனிமையே அவருக்கு ஒரு சிகிச்சை மாதிரி. அந்த தனிமையை கெடுக்கின்ற மாதிரி நீங்கள் நடந்து கொள்ளக் கூடாது. திடீர் என்று சொல்லாமல் கொள்ளாமல் அறைக்குள்ளே போய் அவருக்கு ஆச்சரியத்தையோ, அதிர்ச்சியையோ ஏற்படுத்தக்கூடாது கதவைத்தட்டி அனுமதி கேட்டுப்போவது தான் நாகரிகம்.

உள்ளே போனதும் அங்கே இருக்கின்ற மருத்துவசாதனங்கள், படுக்கை வசதி இதை யெல்லாம் பார்த்து விட்டு குறை சொல்ல ஆரம்பிக்காதீர்கள். ஏதாவது குறை இருந்தால் அதை டாக்டரிடமோ, தாதியரிடமோ சொல்லலாமே தவிர நோயாளி காதிலே விழுகின்ற மாதிரி சொல்லக்கூடாது. நமக்கு சிகிச்சை கொடுக்கின்ற கருவிகள் சரி இல்லை என்று நோயாளி நினைக்க ஆரம்பித்தால் அது மிகவும் கெடுதல்.

நோயாளியுடைய கையைக்குலுக்க வேண்டுமா? அவர் உடலை தொட்டு தடவ வேண்டுமா? மிகவும் பக்குவமான அதைச் செய்யுங்கள் உங்கள் பலத்தையெல்லாம் அங்கே காட்டி விடாதீர்கள். நிதானம், பரிவு, அன்பு இதை மறந்து விடாதீர்கள். நோயாளி பக்கத்திலே உட்காருவதற்கு இடமும் வசதியும் இருந்தால் உட்கார்ந்து பேசுங்கள். நின்று கொண்டே இருக்காதீர்கள். நம்மைப் பார்ப்பதற்காக வந்திருப்பவர் நின்றுகொண்டே இருக்கின்றாரே என்கின்ற நினைப்பு நோயாளிக்கு மனவேதனையைக் கொடுக்கும். அதற்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது. நோயாளியிடம் ஆறுதலாக நான்கு வார்த்தை பேசுவதாக நினைத்துக் கொண்டு ஐயோ பாவம்! முன்பு எல்லாம் இந்த உடம்பு எவ்வளவு திடகாத்திரமாக இருந்தது. இப்போது இப்படி ஆகிவிட்டதே என்று சொல்லக்கூடாது. அது அவருக்கே தெரியும்.

நீங்கள் என்ன பேச வேண்டும் என்றால் இப்போது எப்படி இருக்கின்றீர்கள்? என்று உற்சாகமாக ஆரம்பியுங்கள். மருத்துவமனை எப்படி இருக்கின்றது. உணவு எல்லாம் என்ன கொடுக்கின்றார்கள் என்று விசாரியுங்கள். குறை இருந்தால் நிர்வாகிகளிடம் சொல்லுங்கள். முதலில் உங்களுடன் பேசிக்கொண்டிருப்பதற்கு நோயாளி விரும்புகின் றாரா என்பதை புரிந்து கொள்ளுங்கள். எப்போதும் நோயாளியிடம் அவருடைய நோயைப்பற்றி பேசிக் கொண்டிருப்பது நல்லதில்லை. அவருக்கு நம்பிக்கை ஊட்டக் கூடிய வகையில் உங்கள் பேச்சு இருக்க வேண்டும்.

என் உதவி உங்களுக்கு எதுவும் தேவையா? உங்களுக்காக நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேளுங்கள். இப்படி நீங்கள் கேட்பதனாலே நோயாளி தன் உடல் நலத்திலே அக்கறையுள்ள ஒருவரை பார்த்த தெம்பும் உற்சாகமும் ஏற்படும். மனநிம்மதி கிடைக்கும். முடிந்தால் மருத்துவமனை அலுவலகர்கள், தாதியர்களையும் பாருங்கள். நோயாளியிடம் நீங்கள் பார்க்கின்ற மாறுதல், முன்னேற்றம் இதையெல்லாம் சொல்லி அவருடைய நல்வாழ்வில் உங்களுக்கு அக்கறை இருக்கின்றதை காட்டிக் கொள்ளுங்கள். இதனாலே நோயாளி பற்றி கவலைப்பட யாரும் இல்லை என்கின்ற எண்ணம் அவர்கள் மனதை விட்டுப் போய்விடும்.

நோயாளியிடம் இருந்து எப்போது விடை பெற வேண்டும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். சில வகை நோயாளிகளிடம் சில நிமிடங்கள் இருந்தால் போதும். சில நோயாளிகளிடம் ஒரு மணி நேரம் இருப்பது கூடக் குறைவாகத் தெரியும். நீங்கள் எவ்வளவு நேரம் அவருடன் இருந்தீர்கள் என்பது முக்கியமில்லை. உங்களாலே அவருக்கு எந்த அளவிற்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது என்பது தான் முக்கியம். சில பேர் எப்படி என்றால் நோயாளி சாப்பிடுகின்றாரோ இல்லையோ நிறையப் பழம் அது இது என்று வாங்கிக் கொண்டு போய் குவித்தால் தான் அவர்களுக்கு நிம்மதி.

அது முக்கியமில்லை அதே மாதிரி அதிகமாக மணம் வீசக்கூடிய நறுமணப்பொருட்கள் எதையும் எடுத்துக் கொண்டு போக வேண்டாம். ஒருநோயாளி பார்க்கப் போகின்றபோது கையிலே ஒன்றும் கொண்டு போகவில்லையே என்ற கவலை உங்களுக்குத் தேவை யில்லை. அவர் இருக்கின்ற நிலையிலே உங்கள் கையிலே என்ன இருக்கின்றது என்று எல்லாம் கவனிக்கமாட்டார். நோயாளிக்கு டாக்டர் சிகிச்சை கொடுக்கின்றார். நீங்கள் அவருக்கு தைரியத்தையும் உற்சாகத்தையும் கொடுக்க வேண்டும் அது தான் உங்கள் வேலை. இவ்வளவும் அந்த அமெரிக்க டாக்டர் சொல்லியிருக்கின்ற ஆலோசனைகள்.

நோயாளியைப் பார்க்க போகின்றவர்கள். எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அவர் சொல்லியிருக்கின்றார். நோயாளியை அழைத்துக் கொண்டு போகின்றவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சொன்னால் நன்றாக இருக்கும். ஏனென்றால் என்னுடைய அனுபவம் அப்படி வேறு ஒன்றும் இல்லை.

கொஞ்ச நாளைக்கு முன்னர் ஒரு நண்பர் எனக்கு கடிதம் எழுதியிருந்தார். அவருக்கு தெரிந்த ஒருவர் சென்னையிலே மருத்துவமனையிலே அட்மிட் ஆகியுள்ளார். அறை, பேட் இலக்கம் எல்லாம் விவரமாக எழுதி என்னைப் போய் பார்த்து விட்டு எப்படி இருக்கின்றார்கள் என்று விபரம் எழுது என்று எழுதியிருந்தார். நானும் போய் அவரிடம் என்னை அறிமுகப் படுத்தி பேசிக்கொண்டிருந்தேன். 10 நிமிடம் பேசிக்கொண்டிருந்து உடம்பை பத்திரமாக பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டு புறப்பட்டேன். அவர் எனக்கு உடம்பிற்கு ஒன்றுமில்லை. என் தம்பிக்கு தான் நெஞ்சுவலி என்றார். அவர் எங்கே? என்றேன். எக்ஸ்ரே எடுக்க அழைத்துக் கொண்டு போயிருக்கின்றார்கள். இந்த பேட் சும்மா தானே இருக்கின்றது என்று கொஞ்ச நேரம் படுத்திருந்தேன். நான் துணைக்கு வந்த ஆள் என்றார்.

# நெற்பயிர் அழிவுகளுக்கான இழப்பீடுகள் கிடைக்கவில்லை

## விவசாயிகள் கவலை

(அக்கராயன்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் நெல் அழிவு களுக்கான இழப்பீடுகள் கிடைக்கப் பெற வில்லை என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு 2023 கால போக நெற் செய்கையின் போது அழிவு களை எதிர்கொண்ட விவசாயிகளுக்கான இழப் பீடுகளே கிடைக்கப் பெறாத நிலையில் உள்ளனர்.

காலபோக நெற் செய்கைக் கூட்டங்களில் காப்புறுதி செய்யுங் கள் என அதிகாரி களினால் விளக்கம் அளிக்கப்பட்டு காப் பு றுதி செய்தும் தமது பயிர் அழிவுகளுக்கான இழப்பீடு களை பெற்றுக் கொள்ள முடியாத நிலை மை காணப்படுவ தாக விவ சாயிகள் கவலை அடைந் துள்ளனர் . (நி-6-350)

# மூடப்பட்ட பாடசாலைகளை மீள இயங்க நடவடிக்கை எடுங்கள்

(அக்கராயன்)

கிளிநொச்சி மாவட் டத்தில் மூடப்பட்டுள்ள பாடசாலை களை இயங்க வைப்பதற்கான ஆக்கபூர் வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என பெற்றோர்கள் கவலைத் தெரி விக்கின்றனர்.

1990 ஆம் ஆண்டு ஏற் பட்ட போர்ச் சூழல், உவர டைதல் போன்ற கார ணங் களினால் கிளி நொச்சியில் 8 பாடசாலைகள் மூடப் பட்டுள்ளதுடன். பூந கரி கல்விக் கோட்டத்தில் 6 பாடசாலைகளும் கரைச்சிக் கல்விக் கோட்டத்தில் 2 பாடசா லைகளும் மூடப் பட்டுள்ளன.

இப் பாடசாலைகளை பொருத்தமான இடங்களில் இயங்கவைப்பதற்கான ஏற் பாடுகளை செய்யுங்கள் என அதிகாரிகளிடம் கடந்த 15 ஆண்டுகளாக பெற்றோர் களினால் தொடர்ச்சியாக கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்ற நிலையிலும் அதற்கான உரிய நட வடிக்கைகள் எடுக்கவில் லையென பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ள னர். (நி-6-350)

# கரைச்சியில் இடம்பெற்ற விளையாட்டு விழா



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டம் கரைச்சி பிரதேச செயலர் பிரி விற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக் கிடையிலான விளையாட்டு விழா நேற்று இடம்பெற்றது.

கரைச்சி பிரதேச செயலர் த.முகுந்தன் தலைமையில் ஆரம்பமான இவ் விளையாட்டு விழாவிற்கு பிரதம விருந்தின ராக கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளி தரன் அவர்களும் கௌரவ விருந்தினர்களாக மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் எம்.ஆர் மோகனதாஸ்,மாவட் மேசைபந்தாட்ட பயிற்றுனர் ச.குமார் மற்றும் கிளிநொச்சி மக்கள் அமைப்பின் சார்பில் விளையாட்டு இணைப்பாளர் கலாதரன் ஆகியோரும் அதி திகளாக கலந்து சிறப்பித்திருந் தனர்.

இந்நிகழ்வில் சிரேஸ்ர பொலிஸ் அத்தியட்சகர் கண்டா வளை பிரதேசசெயலர், மாவட்ட புள்ளிவிபரவியலா ளர், உதவி மாவட்டச் செயலர், மாகாண விவசாயப் பணிப் பாளர், மாவட்ட விளையாட்டு பயிற்றுனர்கள், விளையாட்டுக் கழகங்களின் அங்கத்தவர்கள், போட்டியாளர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், விளையாட்டு ஆர்வலர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது வெற்றி பெற் றவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட் டது. (நி-6-316)

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 552





அதனால் ஏதாவது விபரீதம் நேராமல் இருக்க வேண்டுமே என்று நினைத்தபோது அவன் நெஞ்சு துணுக்கமுற்றது. அதை வேறு யாராவது கேட்டிருந்தால்? ஒருவேளை குந்தவை தேவியிடமே யாரேனும் சொல்லி வைத்தால்? இளைய பிராட்டி நம்பிவிடமாட்டாள்! ஆயினும் எவ்வளவு பெரிய ஆபத்து?

இனி, இவ்வாறெல்லாம் இல்லாததைப் புனைந்து கூறுவதையே விட்டுவிட வேண்டும். உண்மையைச் சொல்ல வேண்டும் அதனால் கஷ்டம் வந்தால் சமாளிக்க வேண்டும். அந்த வீர வைஷ்ணவனைப் போன்றவர்களும், ரவிதாசனைப் போன்றவர்களும் ஒற்றர் வேலை செய்யட்டும். நமக்கு என்னத்திற்கு அந்தத் தொல்லை? வாளின் துணை கொண்டு நமக்குக் கிடைக்கும் வெற்றி கிடைக்கட்டும். அதுவே போதும், அதனால் உயிரை இழந்தாலும் சரிதான். தந்திர மந்திரங்களையெல்லாம் இனி விட்டுவிட வேண்டியதுதான்.

இவ்வாறு எண்ணமிட்டுக் கொண்டே சென்றதில் குதிரையின் வேகம் தடைப்பட்டதை அவன் சிறிது நேரம் கவனிக்கவில்லை. ஏன், குதிரை மீதிலிருந்து சிந்தனை செய்து கொண்டே போனதில் கொஞ்சம் கண்ணயர்ந்தும் விட்டான். குதிரை ஓரிடத்தில் தடுமாறிக் குனிந்தபோது அவன் திடுக்கிட்டு விழித்துக்கொண்டான். குதிரை தனது முன்னங்கால் ஒன்றைத் தரையில் ஊன்றி வைக்க முடியாமல் தத்தளித்தது தெரிந்தது. உடனே கீழே இறங்கினான், குதிரையைத் தட்டிக் கொடுத்து விட்டு ஊனமடைந்ததாகத் தோன்றிய முன்னங்காலை எடுத்துப் பார்த்தான். அதன் அடிப்புறத்தில் ஒரு சிறிய கூரிய கல் பொத்துக்கொண்டிருந்தது. அதை லாவகமாக எடுத்து எறிந்தான். நல்லவேளை பெரிய காயம் ஒன்றும் படவில்லை. மறுபடியும் குதிரையைத் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தி விட்டு அதன் முதுகின்மீது ஏறிக் கொண்டான். கப்பலில் அரபு நாட்டார் பேசிக் கொண்டது நினைவு வந்தது:

“தமிழ் நாட்டார் கொடூர மானவர்கள் அறிவும் இல்லாதவர்கள்! குதிரைகளின் குளம்புக்குக் கவசம் அடிக்காமல் வெறுங்காலினால் ஓடச் செய்கிறார்கள். அப்படி ஓடும் குதிரைகள் எத்தனை நாள் உயிரோடிருக்கும்?”

இதை நினைத்துக்கொண்டே வந்தியத்தேவன் குதிரையை ஓட்டினான். வீரர்கள் போர்க்களத்துக்குப் போகும்போது மார்பிலே கவசம் தரிப்பார்கள். குதிரைக் குளம்புக்கு இரும்புக் கவசம் போடுவது அதிசயமான காரியந்தான். ஆயினும் அம்மாதிரி வேறு தேசங்களில் செய்வதுண்டு என்று முன்னமே கேள்விப்பட்டிருந்தான். முதன்முதலாக எதிர்ப்படும் கொல்லுப் பட்டறையில் இதைப்பற்றிக் கேட்க வேண்டியதுதான். முடியுமானால் இந்தக் குதிரையின் குளம்புக்கே கவசம் அடித்துப் பார்க்கலாம். இல்லாவிடில், இது பழையாறை வரை போய்ச் சேர்வதே கடினம். நடுவில் இது விழுந்து விட்டால் வேறு குதிரை சம்பாதிக்க வேண்டும். எப்படிச் சம்பாதிப்பது? யாரிடமாவது திருடத்தான் வேண்டும்! சீச்சீ! அந்த நினைவே வந்தியத்தேவனுக்கு வெட்கத்தை உண்டாக்கியது.

காட்டுப் பாதையிலிருந்து உத்தேசமாகக் குதிரையைத் திசை மாற்றிவிட்டுக் கொண்டு போய் வந்தியத்தேவன் இராஜபாட்டையை அடைந்தான். வந்தது வரட்டும் இனிமேல் இராஜபாட்டை வழியாகத்தான் போகவேண்டும். தன்னைத் தெரிந்தவர்கள் யாரும் இந்தப் பக்கத்தில் இருக்க முடியாது. பழுவேட்டரையர் பரிவாரங்கள் பின்னாலேதான் வரும். மந்திரவாதியும் அப்படித்தான். ஆகையால் அபாயம் ஒன்றுமில்லை. மேலும், இராஜபாட்டையோடு போனால் கொல்லுப் பட்டறை எங்கேயாவது இருக்கும். அதில் குதிரைக் குளம்புக்கு இரும்புக் கவசம் போட முடியுமா என்று பார்க்கலாம்.

வந்தியத்தேவன் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. சிறிது தூரம் சென்றதும், ஒரு கிராமம் தென்பட்டது. கிராமத்தில் ஏதோ ஒருவிதக் கிளர்ச்சி ஏற்பட்டிருந்ததாகத் தோன்றியது. ஒரு பக்கத்தில் வீதிகளிலும், வீடுகளிலும் தோரணங்கள் கட்டி அலங்கரித்திருந்தார்கள்.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## நேர்மை உயர்வு தரும்



மரியாதை ராமன் வசித்து வந்த ஊரில் சோமன் என்ற ஒரு பணக்காரன் இருந்தார். அவர் மிகவும் பொல்லாதவர், பணத்தாசைப் பிடித்தவர். தன்னிடம் வேலை செய்பவர்களுக்கு சரியான கூலி கொடுக்க மாட்டார்.

ஒருமுறை சோமன் தன் தோட்டத்தில் விளைந்த தேங்காய்களை சந்தையில் விற்று விட்டு, கிடைத்த பத்தாயிரம் ரூபாயுடன் தன்னுடைய மாட்டு வண்டியில் காட்டு வழியாக வீட்டுக்கு வரும் போது தனது பணப்பையைத் தொலைத்துவிட்டார்.

வீட்டுக்கு வந்ததும் வண்டியில் பணப்பையைத் தேடி பார்த்து கிடைக்காமல் புலம்பித் தள்ளினார். மாட்டு வண்டி ஓட்டி வந்தவர் முதல் அனைவரையும் கேட்டுப் பார்த்து கிடைக்காமல் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தார்.

அப்போது அவரது மனைவியார் ‘உங்கள் பணப்பையைக் கண்டு பிடித்து கொடுப்பவர்களுக்குத் தகுந்த சன்மானம் கொடுக்கிறேன் என்று சொல்லுங்கள், கண்டிப்பாக யாராவது கொண்டு வந்து கொடுப்பாங்க’ என்றார்.

ஆகா இது நல்ல திட்டமாக இருக்கிறதே என்று நினைத்து அடுத்த நாளே ஊர் முழுவதும் தண்டோரா போட்டு சொல்லி விட்டார். ஊர் மக்களும் பணப்பை கிடைத்தால் கொடுத்து சன்மானம் வாங்கலாம் என்று நினைத்தார்கள். அப்படி தேடி பார்த்தும் யாருக்கும் பணப்பை கிடைக்கவில்லை.

இந்த சம்பவம் நடந்து ஒரு வாரத்திற்கு பின்பு அருகில் இருந்த ஊரிலிருந்து அந்த ஊருக்கு ஒரு வழிப்போக்கர் வந்தார். அவர் பெயர் பூபாலன். மிகவும் நல்ல குணமுடையவர். ஏழையாக இருந்தாலும் கௌரவமாக வாழ பிரியப்படுபவர். தன்னால் முடிந்த வரை அடுத்தவர்களுக்கு உதவுபவர்.

அவர் விவசாயம் செய்த நிலத்தில் நிலத்தடி நீர் கிடைக்காததால் விவசாயம் சரியாக செய்ய முடியவில்லை வேறு தொழில் செய்யவோ தன்னிடம் பணமும் அனுபவமும் இல்லை என்பதால் பக்கத்து ஊருக்கு சென்று ஏதாவது வேலை செய்து சம்பாதித்து பின்னர் தொழில் தொடங்க நினைத்து வந்தார். போகிற வழியில் காட்டுப் பாதையில் இருந்த அம்மன் கோயிலுக்கு போய் வேண்டிக் கொண்டார்.

(தொடரும்...)

அன்பின் வழிப்பட்ட காரியங்கள் செய்யும் அழகிய வாழ்க்கை வாழுங்கள்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# இளம் தாயின் மரணம் மருத்துவக் கொலை

மன்னாரில் குழந்தை பிரசவித்து இருபது நாளில் பிரஸ்தாபத் தாய் இறந்த சம்பவம் மனிதநேயமுள்ளவர்களின் மனங்களைச் சுட்டெரித்துவிட்டது.

மரியராஜ் சிந்துஜா (வயது–27) என்ற இளம் தாய் இரத்தப்போக்குக் காரணமாக மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதிலும் சம்பந்தப்பட்ட மருத்துவர்கள் தமது கடமையைச் செய்யாத காரணத்தால், அந்த இளம் தாய் பரிதாபகரமாக உயிரிழந்து போனார்.

அதாவது உரிய நேரத்தில் குறித்த இளம் தாயை மன்னார் பொது வைத்தியசாலையில் உறவினர்கள் அனுமதித்தபோதிலும் நீண்ட நேரமாகியும் மருத்துவர்கள் அவரைப் பார்வையிடாத காரணமாகவே இளம் தாயின் மரணம் சம்பவித்துள்ளது.

ஏலவே வடமாகாண வைத்தியசாலைகளில் பல்வேறு சிக்கல்களும் முரண்பாடுகளும் தலைவிரித்தாடுகின்ற இந்த நேரத்தில் கூட, மன்னார் பொது வைத்தியசாலையில் அசண்டையீனம் இருந்துள்ளதெனும்போது அங்குள்ள வைத்தியசாலை நிர்வாகம் எப்படியாக இருந்துள்ளது.

சம்பந்தப்பட்ட மருத்துவர்களின் கடமை எப்படியாக நடந்துள்ளதென்பதை மதிப்பீடு செய்வதில் கடினம் இருக்க முடியாது.

ஆம், மன்னார் பொது வைத்தியசாலையின் அசண்டையீனம் காரணமாக ஓர் இளம் தாய் உயிரிழந்துள்ளார் எனில், அது கொலைக் குற்றமாகக் கருதப்பட வேண்டும்.

பொதுவில் மருத்துவர்களின் அல்லது வைத்தியசாலை நிர்வாகத்தின் பொறுப்பற்ற செயல்களால் ஏற்படுகின்ற மரணங்கள் தொடர்பில் நம் மக்கள் சட்டநடவடிக்கை எடுக்காத காரணத்தாலும் இறப்புக்கான காரணங்களை மருத்துவர்கள் மறைத்து பொய்யான காரணத்தைப் பதிவு செய்வதனாலும் மருத்துவக் குற்றவாளிகள் தப்பித்துக் கொள்கின்றனர்.

ஆனால் மருத்துவர்களின் அசண்டையீனத்தால் – பொறுப்பற்ற தன்மையால் – பிழையான சிகிச்சைகளால் ஏற்படுகின்ற உயிரிழப்புகள் உண்மையில் கொலைக் குற்றத்துக்குள் அடக்கப்பட வேண்டியவை.

எனினும் மருத்துவக் கொலையாளிகள் சர்வசாதாரணமாகத் தப்பித்து விடுகின்றனர்.

தவிர, இந்த மரணம் என்னால் ஏற்பட்டதே என்ற மனவேதனை கூட, சம்பந்தப்பட்ட மருத்துவர்களிடம் இருப்பதில்லை. அந்தளவுக்கு அவர்களின் மனங்கள் வக்கிரமடைந்து போயின.

என்ன செய்வது, ஓர் ஆசிரியர் ஒரு மாணவனைத் தண்டித்தால் – அடித்தால் அந்த ஆசிரியரை உடனடியாகக் கைது செய்து சிறையில் அடைக்கின்ற சட்டங்கள்; உயிரைப் பறித்த மருத்துவர்களின் விடயத்தில் அமைதியாக இருப்பதுதான் வியப்புக்குரியது.

# ரூ.1,700ஐ பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு பெற்றுத்தருவதாக உறுதியளிக்கவில்லை

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனமாக 1,700 ரூபாவைப் பெற்றுத் தருவதாகத் தாம் ஒருபோதும் உறுதியளிக்கவில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் விருந்தகம் ஒன்றில் ஊடகங்களின் செய்திப்பிரிவின் பிரதானிகளைச் சந்தித்த அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களது வேதனத்தை நிர்ணயிக்கும் நடவடிக்கைகளை, தொழில் அமைச்சு, வேதன நிர்ணய சபையின் ஊடாக மேற்கொண்டிருந்தது.

தோட்டத்துறை என்ற பழைமையான விடயத்தை என்னிடம் கூற வேண்டாம்.

தற்போது விவசாய முறைமையே கடைப்பிடிக்கப்படுகிறது.

அதன் கீழ் இலாப மீட்டி தொழிலாளர்களை பராமரிக்க முடியாத நிறுவனங்களிடம் இருந்து தோட்டக் காணிகளை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தோட்டப் பகுதிகளில் உள்ள லயன் அறைகள் அமைந்துள்ள காணிகளைக் கிராமங்களாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# கணனிப் பாகங்களூடாக ஐஸ் போதைக் கடத்தல்

கணினி பாகங்களில் மிகவும்சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 5 கிலோ கிராம் ஐஸ் போதைப் பொருட்கள் நேற்று புதன்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த போதைப்பொருட்கள் 63 கணினி பாகங்களிற்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்துள்ளன.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர்களுக்கு கிடைத்த தகவலின் பேரில் கட்டுநாயக்க பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

துபாயில் தலைமறைவாக உள்ள பிரபல போதைப் பொருள் கடத்தல்காரரான "துபாய் நிப்புன" என்பவரின் தலைமையில் இந்த போதைப்பொருட்கள் நாட்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7)

# கட்டுப்பாட்டை இழந்த பாரவூர்திகள் ஆற்றில் வீழ்ந்து விபத்து

## சாரதி உயிரிழப்பு

இரத்தினபுரி - எம்பிலிபிட்டிய பிரதான வீதியில் பதுல்பான பகுதியில் நேற்று (07) இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

சீமெந்து ஏற்றிச் சென்ற பாரவூர்தி ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வீதி ஓரமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த மற்றுமொரு பாரவூர்தியுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது இரண்டு பாரவூர்திகளும் ஆற்றில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

சம்பவத்தில் கட்டுப்பாட்டை இழந்த பாரவூர்தியை செலுத்திய சாரதி உயிரிழந்தார்.

குறித்த விபத்து சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இரத்தினபுரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

# மொரட்டுவை முரவத்தையில் ஆணொருவரின் சடலம் மீட்பு

மொரட்டுவை, முரவத்த பிரதேசத்திலுள்ள கடற்கரை பகுதியில் நேற்று ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக மொரட்டுவை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் இரத்மலானை பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதுடைய நபரொருவராவார்.

சடலமாக மீட்கப்பட்டவர் நேற்று முன்தினம் (06) இரத்மலானை ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள கடற்கரை பகுதியில் நீராடிக் கொண்டிருக்கும் போது நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக களுபோவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரட்டுவை தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# விபரீத முடிவெடுத்த 17 வயது மாணவி மரணம்

*(கொழும்பு)*

பாடசாலை மாணவியொருவர் கடிதம் எழுதி வைத்துவிட்டு நேற்று தற்கொலை செய்து கொண்டு உயிரிழந்துள்ளார்.

சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளுக்காக காத்திருந்த ரக்வானை - அலவத்தன்ன பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதுடைய மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மாணவி அவர் வசிக்கும் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவருடன் காதல் உறவில் இருந்துள்ளதாகவும் உறவை நிறுத்துமாறு பெற்றோர் பலமுறை எச்சரித்துள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மாணவி இறப்பதற்கு முன்னர், கைகளை வெட்டி, இரத்தத்தினால் கடிதமொன்றினை எழுதி குறித்த நபருக்கு அனுப்பியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த மாணவியின் பிரேதப் பரிசோதனை கஹவத்தை ஆதார வைத்தியசாலையின் சட்ட வைத்தியர் முன்னிலையில் இடம்பெற்றுள்ளதுடன், சாட்சியங்களின் அடிப்படையில் இந்த மரணம் தற்கொலை என முடிவு செய்யப்பட்டுள்ளது.(ம-7)

# மட்டக்களப்பில் வர்த்தகர் கழுத்து அறுத்துக் கொலை

*(மட்டக்களப்பு)*

மட்டக்களப்பு, ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹிஸ்புல்லாஹ் நகரில் வர்த்தகர் ஒருவர் கழுத்து அறுக்கப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருள் பாவனையாளர்கள் வர்த்தக நிலையத்தை முற்றுகையிட முற்பட்ட வேளையில் இந்த கொலை இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும் உயிரிழந்தவரின் சடலம் பிரதே பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை கைது செய்வதற்கு ஏறாவூர் பொலிஸார் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

# ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் கைது

*(கொழும்பு)*

இரத்மலானை புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் ஐஸ் போதைப் பொருளை வைத்திருந்த நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின்படி மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது இவர் கைது செய்யப்பட்டார்.

கைதான சந்தேக நபரிடமிருந்து 13 கிராம் 500 மில்லிகிராம்ஐஸ்போதைப் பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் மொரட்டுவ பிரதேசத்தை சேர்ந்த 45 வயதுடையவர் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7)



# ஜனாதிபதித் தேர்தல் 2024 செப்டெம்பர் 21
# கடந்தகால ஜனாதிபதித் தேர்தல்கள் பற்றிய ஒரு மீள் பார்வை


**கலாநிதி க. தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.


**04**

78 அரசியல் யாப்பை புறக்கணித்த தமிழர் விடுதலை கூட்டணி ஜனாதிபதித் தேர்தலையும் நிராகரித்துத் தான் ஆக வேண்டும் என்று அமிர்தலிங்கம் மறுப்பு தெரிவித்தார். கடைசியாக தமிழர் விடுதலை கூட்டணி ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்கும் முடிவை எடுத்தது. ஆனால் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் குமார் பொன்னம்பலம் போட்டியிட தீர்மானித்திருந்தார்.

### வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு வெளியிலும் தமிழீழத்துக்கான மக்கள் ஆணையைப் பெற வேண்டும்

வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு வெளியிலும் தமிழீழத்துக்கான மக்கள் ஆணையைப் பெற வேண்டும் என்றும், தமிழீழத்துக்கான மக்கள் ஆணையை பெற்ற தமிழர் விடுதலை கூட்டணி அதற்காக எதையும் செய்யவில்லை என்றும் கூறி அதற்காகவே தான் தேர்தலில் போட்டியிடுவதாக குமார் பொன்னம்பலம் அறிவித்தார். மேலும். தமிழ் மக்கள் தேர்தலை புறக்கணித்தால் அது ஜே.ஆருக்கு சாதகமாக அமையும் என்றும் அதுதான் தமிழர் விடுதலை கூட்டணிக்குத் தேவை என்றும் வாக்களிப்பில் மக்கள் கலந்து கொள்ளவேண்டும் என்றும் குமார் பொன்னம்பலம் பிரச்சாரம் செய்தார்.

### கொப்பேகடுவைக்கு தமிழ் மக்கள் அதிகமான வாக்குகளை அளித்தனர்

அன்றைய காலத்தில் தமிழ் பிரதேசங்களில் நிகழ்ந்த பல்வேறு அரச அட்டூழியங்கள் காரணமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் கொப்பேகடுவைக்கு தமிழ் மக்கள் அதிகமான வாக்குகளை அளித்து ஜே.ஆருக்கு தமது எதிர்ப்பலையை வெளிக்காட்டினர். யாழ்ப்பாண மாவட்டத்தில் ஜே.ஆரை விட கொப்பேகடுவ அதிகமான வாக்குகளைப் பெற்றார். அங்கு ஜே.ஆர் 44,780 (20.54%), கொப்பேகடுவ 77,300 (35.46%) ஆகிய வீதங்களில் வாக்குகளைப் பெற்றார்கள்.

### யாழில் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் கிடைத்த மொத்த வாக்குகளை விட குமார் பொன்னம்பலத்துக்கு குறைவு

குமார் பொன்னம்பலத்துக்கே யாழ்ப்பாணத்தில் அதிகப்படியான வாக்குகளாக 87,263 (40.03%) கிடைத்தன. ஆனாலும் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் கிடைத்த மொத்த வாக்குகளை விட குமார் பொன்னம்பலத்துக்கு கிட்டத்தட்ட 35,000 வாக்குகள் குறைவாகக் கிடைத்தது வருந்ததக்க விடயமாகும்.

## 1வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -1982

### வட மாகாணம்

| வேட்பாளர் | யாழ் மாவட்டம் வாக்குகள் | % | வன்னி மாவட்டம் வாக்குகள் | % |
|---|---|---|---|---|
| திரு. ஜே.ஆர். ஜயவர்தன | 44,780 | 20.54% | 32,834 | 46.42% |
| திரு. ஹெக்டர் கொப்பேகடுவ | 77,300 | 35.46% | 23,221 | 32.83% |
| திரு. ரோஹன விஜயவீர | 3,098 | 1.42% | 2,286 | 3.23% |
| திரு. குமார் பொன்னம்பலம் | 87,263 | 40.03% | 11,521 | 16.29% |
| திரு. கொல்வின் ஆர்.டி. சில்வா | 3,376 | 1.55% | 584 | 0.82% |
| திரு. வாசுதேவ நாணயக்கார | 2,186 | 1.00% | 292 | 0.41% |
| செல்லுபடியான வாக்குகள் | 218,003 | | 70,739 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 10,610 | | 2,447 | |
| மொத்தமாக வாக்களித்தவர்கள் | 228,613 | 46.30% | 73,186 | 61.5% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 493,705 | | 119,093 | |

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னைய நாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமையானது ஏழாண்டுகளுக்கு நீக்கப்பட்டிருந்தமையினால் அவரால் இத்தேர்தலில் போட்டியிட முடியவில்லை. எனவேதான் திரு. ஹெக்டர் கொப்பேகடுவ போட்டியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### 2 ஆவது ஜனாதிபதித் தேர்தல் -1988

சாதிவாதம் காரணமாகவும் வறிய பின்புலம் காரணமாகவும் ஜேஆரும் ஐ.தே. கட்சி பிரதிநிதித்துவப்படுத்திய மேல்வர்க்கமும் பிரேமதாச ஜனாதிபதியாக வருவதை விரும்பாமல் அவருக்கெதிராக சதி செய்து கொண்டிருந்தது. அச்சதிகள் எல்லாவற்றையும் முறியடித்துக் கொண்டு பிரேமதாச போட்டியிட்டு அப்போது நிலவிய பயங்கரமான சூழலைப் பயன்படுத்தி தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட சிறிமாவை விட வெறும் இரண்டு லட்சத்து எழுபத்தொண்பதாயிரம் வாக்கு வித்தியாசத்தில் 50.43 வீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

## 1வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -1982

### கிழக்கு மாகாணம்

| வேட்பாளர் | மட்டக்களப்பு மாவட்டம் வாக்குகள் | % | திகாமடுல்லை மாவட்டம் வாக்குகள் | % | திருகோணமலை மாவட்டம் வாக்குகள் | % |
|---|---|---|---|---|---|---|
| திரு. ஜே.ஆர். ஜயவர்தன | 48,094 | 40.05% | 90,772 | 56.39% | 45,522 | 48.63% |
| திரு. ஹெக்டர் கொப்பேகடுவ | 21,688 | 18.06% | 53,096 | 32.98% | 31,700 | 33.87% |
| திரு. ரோஹன விஜயவீர | 1,287 | 1.07% | 7,679 | 4.78% | 5,395 | 5.76% |
| திரு. குமார் பொன்னம்பலம் | 47,095 | 39.22% | 8,079 | 5.02% | 10,068 | 10.76% |
| திரு. கொல்வின் ஆர்.டி. சில்வா | 1,294 | 1.08% | 967 | 0.60% | 635 | 0.69% |
| திரு. வாசுதேவ நாணயக்கார | 618 | 0.52% | 377 | 0.23% | 276 | 0.29% |
| செல்லுப்படியான வாக்குகள் | 120,076 | | 160,970 | | 93,596 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,876 | | 2,101 | | 1,795 | |
| மொத்தமாக வாக்களித்தவர்கள் | 122,955 | 71.29% | 163,071 | 79.83% | 95,391 | 71.37% |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 172,480 | | 204,268 | | 133,646 | |

## 1வது ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் -1982

| வேட்பாளர் | கட்சி | வாக்குகள் | % |
|---|---|---|---|
| திரு. ஜே.ஆர். ஜயவர்தன | ஐக்கிய தேசியக் கட்சி | 3,450,811 | 52.91% |
| திரு. ஹெக்டர் கொப்பேகடுவ | ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி | 2,548,438 | 39.07% |
| திரு. ரோஹன விஜயவீர | மக்கள் விடுதலை முன்னணி | 273,428 | 4.19% |
| திரு. குமார் பொன்னம்பலம் | அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 173,934 | 2.67% |
| திரு. கொல்வின் ஆர்.டி. சில்வா | லங்கா சமசமாஜக் கட்சி | 58,531 | 0.90% |
| திரு. வாசுதேவ நாணயக்கார | நவ சமசமாஜக் கட்சி | 17,005 | 0.26% |
| செல்லுப்படியான வாக்குகள் | | 6,522,147 | 100.00% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | | 80,470 | |
| மொத்தமாக வாக்களித்தவர்கள் | | 6,602,617 | |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | | 8,145,015 | |
| வாக்கு வீதம் | | 81.06% | |

ஜேவிபியின் இரண்டாவது ஆயுத கிளர்ச்சியும் அதனை நசுக்குவதற்காக அரசு கட்டவிழ்த்து விட்ட வரைமுறையற்ற அடக்குமுறையும் இலங்கையில் இரத்த ஆறை பெருக்கெடுக்க செய்திருந்தவேளையில் இத்தேர்தல் நடைபெற்றது.

(தொடரும்...)

## ஆயிரக்கணக்...

வேற்பை வழங்கினர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு மன்னார் மாவட்டப் பொது வைத்திய சாலையினுள் அத்துமீறி நுழைந்து கடமைக்கு இடையூறை ஏற்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் மன்னார் பொலிஸ் நிலையத்தில் வைத்திய சாலைத் தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை அடுத்து வைத்தியர் அர்ச்சுனா மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட மருத்துவரை சனிக்கிழமை மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது அவரை நேற்றைய தினம் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

இந்த நிலையில் நேற்று குறித்த வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்.ளப்பட்டபோது மருத்துவர் அர்ச்சுனா மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

மருத்துவர் சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தலைமையிலான சட்டத்தரணிகள் மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

வழக்கை விசாரித்த நீதவான் நிபந்தனையின் அடிப்படையில் தலா 50 ஆயிரம் ரூபாய் இரு பிணையில் மருத்துவரைச் செல்ல அனுமதித்தார்.

இந்த நிலையில் மன்றில் இருந்து மருத்துவர் வெளியேறியபோது மன்னார் மாவட்ட நீதிமன்றத்திற்கு முன் ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி வரவேற்றனர்.

பின்னர் மன்னார் மாவட்ட மக்கள் மருத்துவரை மன்னார் பொது விளையாட்டு மைதானப்பகுதிக்கு அழைத்துச் சென்று மாலை அணிவித்து தங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

மன்னார் - தம்பனைக்குளம் பகுதியைச் சேர்ந்த பட்டதாரியான இளம் தாய் ஒருவர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவமானது கடந்த 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

குறித்த பெண்ணின் மரணத்தின் போது சம்பவ தினம் விடுதியில் இருந்தவர்களின் அசமந்த போக்கே காரணம் என குற்றம் சுமத்தப்பட்டது.

இந்த நிலையிலேயே மருத்துவர் அர்ச்சுனா மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு சென்ற நிலையில் அங்கு கடமைக்கு இடையூறு ஏற்படுத்திய தாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,285)

## மின்சாரம்...

கடமையாற்றும் கந்தளாய்ப் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய லான்ஸ் கோப்ரல் நிலையுடைய சிப்பாய் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், அவரது உயிரிழப்புத் தொடர்பில் இராணுவப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் சடலம் முல்லைத்தீவு வைத்திய சாலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (ம-7)

## கட்டுப்பணம்...

ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று 4 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-7)

## வாக்களிப்பு...

வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையினால் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்களிப்பு நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுவதற்கு இன்னும் 44 நாட்கள் மாத்திரமே உள்ள நிலையில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்துவதற்கு எதிர்வரும் 14ஆம் திகதி வரை சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளர் 50 ஆயிரம் ரூபாயும், சுயாதீன வேட்பாளர் 75 ஆயிரம் ரூபாயையும் கட்டுப்பணமாகச் செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## உத்தியோகபூர்வ...

தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2024ஆம் ஆண்டு நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் தென் இலங்கையில் இருந்து பல கட்சிகளைச் சார்ந்த சிங்கள வேட்பாளர்கள் தமது கட்டுப்பணத்தினைச் செலுத்தி உள்ளனர்.

வடக்குக் கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பொது வேட்பாளர் ஒருவரை களம் இறக்குவது பற்றி கடந்த ஆறு மாதமாகப் பேசப்பட்டு வருகின்றது.

அந்த நிலையில் தமிழ்த் தேசிய கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவது என்று நாங்கள் அனைவரும் முடிவெடுத்து இருக்கின்றோம்.

அது தொடர்பில் வடக்கிலும் கிழக்கிலும் இருக்கக்கூடிய பல்வேறுபட்ட தரப்புக்களுடனும் பல்வேறுபட்ட தனிநபர்களுடனும் நாங்கள் பேசியிருக்கின்றோம்.

அந்த வகையில் நமது வேட்பாளர் தொடர்பாக நாங்கள் கலந்துரையாடி இரண்டு, மூன்று நபர்களின் பெயர்களை நாங்கள் கூறியிருக்கின்றோம். அதில் ஒருவரைக் கட்டாயமாகப் பொது வேட்பாளராக நிறுத்துவோம். இன்று பொது வேட்பாளர் யார் என மக்களுக்கு தெரியப்படுத்துவோம்.

தற்போது இரண்டு நபர்களின் பெயர்கள் பரிசீலனையில் உள்ளது. அதில் எல்லோரும் இணங்கிச் சரியான ஒருவர் தெரிவு செய்யப்படுவர் எனத் தெரிவித்தார். (ம-7,33)

## நல்...

வரத்து தடை செய்யப்படவுள்ளது.

குறித்த வீதித் தடை செப்ரெம்பர் 4ஆம் திகதி மாலை வைரவர் சாந்தி நிறைவடைந்த பின்னரே திறந்து விடப்படும்.

வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ். மாநகர சபைக்கு முன்பாக உள்ள வீதியால் பயணித்து யாழ் நகரை அடைய முடியும் என்பதுடன் இரதோற்சவம் மற்றும் சப்பறத் திருவிழாக்களின் போது கச்சேரி நல்லூர் வீதியாலேயே பயணிக்க முடியும்.

வீதித் தடைகளை அமைப்பது தொடர்பாக நேற்று துறைசார் அதிகாரிகளால் களவிஜயம் மேற்கொள்ளப்பட்டது.

யாழ்.மாநகர ஆணையாளர் எஸ். கிருஸ்னேந்திரன், யாழ்ப்பாண மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்க உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள், மாநகர சபை அதிகாரிகள் இதன்போது கலந்து கொண்டனர். (ம-7,33)

## குப்பைக்...

கில் நேற்று புதன்கிழமை தீப்பரவல் ஏற்பட்டது

குறித்த தீ விபத்துக்கான காரணம் தெரியவராத நிலையில் பிரதேச சபை ஊழியர்களே குப்பைகளை வேண்டுமென்றே தீ மூட்டுவதாக அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ம-7,33)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127







































# ஐ.எம்.எப் கடன் சலுகையின் மூன்றாவது மீளாய்வு ஒத்திவைப்பு

## நிதி இராஜாங்க அமைச்சர்



இலங்கைக்கு வழங்கப்பட்ட கடன் சலுகையின் மூன்றாவது மீளாய்வு ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் நடைபெறுமென நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இதனை முன்னிட்டு அதிகாரிகள் குழுவொன்று நாட்டிற்கு வருகை தரவுள்ளதாக அவர் கூறினார்.

சர்வதேச நாணய நிதிய (IMF) தூதுக்குழுவின் சிரேஷ்ட தலைவர் பீட்டர் புரூவர் உள்ளிட்ட குழுவினர் அண்மையில் நாட்டிற்கு விஜயம் மேற்கொண்டனர்.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் அவர்கள் கலந்துரையாடியதுடன், இலங்கைக்கான கடன் மறுசீரமைப்பு திட்டம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு ஒரு பில்லியன் டொலர் கடன் சலுகை 3 தவணைகளில் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# நான் யாரிடமும் சண்டையிட வரவில்லை - ஜனாதிபதி ரணில்

என்னைப் பொறுத்தவரை இந்த ஜனாதிபதித் தேர்தல் ஒரு போர் அல்ல. நான் யாரிடமும் சண்டையிட வரவில்லை. நான் எனது கொள்கைகளுடன் வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களின் பிரதிநிதிகளை நேற்று சந்தித்த போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

உண்மையைச் சொல்லி நாட்டைக் காப்பாற்றத் தயாரா? அல்லது பொய்யைக் கூறி நாட்டைக் குழப்பத் தயாரா? என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் நாட்டை முன்னெடுத்துச் செல்வேன். நான் மற்றவர்களைப் போல வாக்குறுதிகளை அளிப்பதில்லை. செய்து காட்டியுள்ளேன். ஏனையோர் வாக்குறுதிகளை வழங்குவதாகவும் ஜனாதிபதி இங்கு தெரிவித்தார்.

மேலும் மற்ற வேட்பாளர்கள் எனக்கு சவாலாக இல்லை என்றும் நான் நாட்டின் எதிர்காலத்திற்காக வருகிறேன். ஏனைய வேட்பாளர்கள் தமது எதிர்காலத்திற்காக வரவுள்ளதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

இதேவேளை சர்வதேச நாணய நிதியத்துடனோ அல்லது கடன் வழங்குநர்களுடனோ செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளில் எந்த அளவுகோலையும் மாற்ற முடியாது எனவும் அவ்வாறு செய்தால் இலங்கைக்குக் கிடைக்கும் நிதியை இழக்க நேரிடும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## கரவெட்டி...

உரிய அனுமதியின்றி தொடர்ந்தும் கட்டப்பட்டு வந்த மதில்கள் இடித்தழிக்கப்பட்டுள்ளன.

நேற்று காலை 10.30 மணியளவில் கரணவாய் வடக்கு நவிண்டில் பிரதேசத்தில் உள்ள மதிலொன்றும் இடித்தழிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று மதியம் நெல்லியடி நகர பஸ் தரிப்பிடத்தின் பின்னால் உள்ள வீடொன்றின் மதிலும் பிரதேச சபையின் அனுமதியின்றி கட்டப்பட்டதால் இடித்தழிக்கப்பட்டுள்ளது.

சமீப காலமாக அனுமதி பெறாமல் கட்டிடங்கள், மதில்கள் கட்டப்பட்டு வருகின்றமை அதிகரித்து வருவதாகவும், இதனால் இவற்றை கட்டுக்குள் கொண்டு வர முடியாத நிலை காணப்படுவதாகவும்,

இதன் காரணமாக 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 49 ஆவது பிரிவுக்கு முரணாக தொடர்ந்தும் மதில்கள் கட்டப்பட்டு வந்த காரணத்தால் பிரிவு 52 க்கு அமைவாக இடித்து அழிக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் பிரதேச சபையினரால் கடந்த ஒரு வருடமாக நேரடியாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு பல்வேறு கடிதங்களும் வழங்கப்பட்டு வந்த நிலையிலும் அதனை மீறி தொடர்ந்து கட்டப்பட்ட காரணத்தினால் இவை இடித்தழிக்கப்பட்டதாக பிரதேச சபை தரப்பினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு நடவடிக்கைகளும் கரவெட்டி பிரதேச சபையின் செயலாளர் கணேசன் கம்சனாதன் தலைமையில் இடம்பெற்றது. சம்பவ இடங்களில் கரவெட்டி பிரதேச சபையின் துறைசார் உத்தியோகத்தர்களும், நெல்லியடி பொலிஸாரும் பிரசன்னமாகியிருந்தனர். (ம-7,33,60)

## எவ்வித...

சுற்றாடல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையான அபிவிருத்திக்கான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் அஜித் மான்னப்பெரும பாராளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்து, நிதிப் பற்றாக்குறையால் 23 திட்டங்கள் கைவிடப்பட்டதாகவும், 11 திட்டங்கள் சில காரணங்களால் கைவிடப்பட்டதாகவும் தெரிவித்தார்.

கைவிடப்பட்ட திட்டங்களில் பொலநறுவையில் 1.1 பில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மெத்சிறிபாய நிர்வாக வளாகம் மற்றும் ஹட்டன் புகையிரத நிலையம் ரூ. 40 மில்லியன், எந்த பயனும் இல்லாமல் சும்மா இருந்தது.

அரசியல் நோக்கங்களுக்காக அரசியல் தலைவர்களால் பொது நிதியை வீணடிக்கும் வகையில் இது போன்ற திட்டங்கள் தொடங்கப்படுவதை அவதானித்த அவர், அத்தகைய திட்டங்களை தொடங்குவதற்கு முன் அரசியல் சார்பற்ற குழுவால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று அறிக்கை பரிந்துரைத்துள்ளது என்றார். (ம-7)

## பதவிகளை...

களுக்கு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது, வேட்பாளர்களுக்கான ஆதரவு குறித்துப் பரவலாகப் பேசப்படுகிறது.

கைச்சாத்திட்ட 2 கட்சிகளுக்கும் தெளிவானதொரு கொள்கை இருக்கிறது.

பதவிகளையோ, வேறு வகையான சலுகைகளையோ, எதிர்பார்க்கும் கட்சிகளை எம்மோடு நாம் இணைத்துக் கொள்ளவில்லை.

இதய சுத்தியுடன் மக்களுக்குச் சேவை செய்வதற்கு முன்வருபவர்களை மாத்திரமே நாம் எம்முடன் இணைத்துக்கொள்கிறோம்.

எனவே, சலுகைகளையோ, வேறு கோரிக்கைகளையோ முன்வைத்து தம்மிடம் எவரும் பேரம் பேச முடியாது என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.(ம-7)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-950)
076 825 7716 (ஆகாஸ்)

வங்கி மீதி வசதி
(Show money)
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு: (230)
074 17 37 684

விசாக்கான (Show money)
வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.
1%
• Visit visa
• Student visa
• Fixed & saving
• லட்சத்திற்கு 1000 மட்டுமே
சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு: (216)
075 033 6759

புதிய பிரிவுகள் ஆரம்பம்
தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
aat (Sri Lanka)
(AA1 - 10.08.2024)
(AA 2, AA 3 - 24.08.2024)
G.C.E O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்.
கணக்காளர் கற்கை நெறிகள்
Chartered Accounting Courses
Business Level - I,II (10.08.2024)
வங்கியியல் கற்கை நெறிகள்
Banking Courses
DBF & HDBF (14.09.2024) (C-935)
Certificate Course in English
Further Details : Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road, Jaffna.
021 222 3382/ 021 222 9149
- 077 440 5917

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)
CIMS College
49A, Chapel Street, Jaffna. (C-0949)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

அனைத்து நாடுகளுக்குமான
விமான பயணச்சீட்டுக்கள்
குறைந்த விலையில்
•Air Ticket Date Change •Travel Insurance
•Online Visa Appoinments •Travel Itinerary
•Sri Lanka Visa Extension
•All Country Visa Services (C-0949)
உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு | மட்டக்களப்பு | திருகோணமலை | கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு | கொடிகாமம் | சாவகச்சேரி | புத்தூர்
யாழ்ப்பாணம் | நாச்சிமார் கோவிலடி | பண்டத்தரிப்பு
சுன்னாகம் | மானிப்பாய் | சங்கானை | கோப்பாய்
நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை
V2 TRAVELS 0768226240 0768226241

பணியாளர் தேவை
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் முழுநேரப் பணியாளராக கடமையாற்றுவதற்கு (ஆண்) பணியாளர் இருவர் தேவை.
தொடர்புகளுக்கு
077 990 5818 (C-951)

மணமகள் தேவை
யாழ் இந்து கௌரவ குலத்தைச் சேர்ந்த 1988 ஆம் ஆண்டு, பூரம் நட்சத்திரம், 4 ம் பாதம், அரச உத்தியோக வேலை பார்க்கும் மணமகனிற்கு அரச உத்தியோக மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (1648)
070 249 4018, 076 354 8549

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-0949)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.